
# ஆத்தங்கர



கலைமாமணி
உடப்பூர் வீரசொக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தங்கர

(கவிதை தொகுதி)

கலைமாமணி

**உடப்பூர் வீரசொக்கன்**

**வெளியீடு: இளம்தாரகைவட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : ஆற்றங்கர

வகை : கவிதை தொகுதி

முதல்பதிப்பு : 2019.10.09

வெளியீடு : உடப்பு இளம்தாரகைவட்டம்

அச்சுபதிவு : க. நிவேஸ்காந்த்

அச்சுப்பதிவு மேற்பார்வை : வை.சசிகுமார்

விலை : 300.00ரூ

நூல் ஆசிரியர் : உடப்பூர் வீரசொக்கன்

Title : Athankara

Editor : Kalapoosanam udappoor Veerasokkan

First publish : 2019.10.09

Published By : Young star club - Udappu

Price : 300.00Rs

Contact Num : 0767887775/0757545539/0714411607

ISBN NO : 978-955-1907-07-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த கனவுகளின்
# நனவாக......!

ஈன்ற பொழுதின் பெரிதவக்கும் - தன்மகனை

சான்றோர் எனக்கேட்ட தாய்
(குறல்)



கல்வி யறிவு தந்து

கலை பயில பாதையும்
வகுத்து

நல் வழியையும் காட்டி

நல் உயர பண்பும் வழங்கி

பல் கலையும் படைக்க எந்தனுக்கு

பாங்கோடு பாதையும் சொல்லித்தந்து

தனையன் நான் கவிதையாக்கி

முத்தம் தந்து என்னை முறுவளிக்கும்

பெற்றோர் வீரபத்திரன்

முத்துராக்காய் படைத்தேன்

படையல் தன்னை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணத்துளி...

கவிதை உன்மை வெளிப்பாட்டின் ஊற்றின் கூறு அது உணர்வில் தவழ்ந்து, உள்ளத்தில் சங்கமாகி எண்ணத்தில் வெளிவரும் போது கவிதையாக மலர்கின்றது. இத்துடன் உறவின் உணர்ச்சிகள் கூர்மை பெறும் கவிதைக்ள் எக்காலத்திலும் பேசப்படுவதினால் வாழ்வு வளம் பெறும் வாழும் என்பது ஐயமில்லை. எனது உள்ளக்கிடைக்கின் உணர்வுகள் ஆத்மார்த்தம் பெறும் போது அதை பாடுபொருளாக கொண்டு கவிதைகள் யாத்துள்ளேன்.

இன்று எமது நாட்டில் கவிதை வளர்ச்சியானது பரிணாமம் பெற்றுள்ளது. அது எங்கோ ஓர் மூலையில் மலர்ந்து வளர்ந்து மலராக வீசும் தென்றலாக ஊற்றெடுத்து பாய்கின்றது. அதுவும் எங்கள் போன்ற பகுதிகளிலிருந்து இவ்வகையான நூல்கள் படைப்பு இலக்கியத்துறையில் கால்கோளிடுவது என்றால் அது சாதனையென்று உளம்பூரித்தாலும் வேதனையுடன் வெகும்பிநிற்கும் உள்ளங்களை காணக்கூடியதாக

இருக்கின்றது. என்றாலும் ஆத்தங்கர ஆர்ப்பரிப்பின்றி அமைதியுடன் ஆற்றொழுக்கா முறையில் மலர்கின்றது. அதை படித்து பயின்று சுவைத்து பலன் பெற்று லயிக்க வாசகர்களின் பார்வைக்கு விட்டுவிடுகின்றேன்.

இக்கவிதை தொகுதிக்கு அணிந்துறை வழங்கிய சென்னை ஆன்மிக எழுத்தாளர் பனையபுரம் அதியமான்

அவர்கள் என் மதிப்பிற்கும், வணக்கத்துக்கும், நன்றிக்கும் உரியவர். ஆத்தங்கரை அமைதியுடன் வந்துள்ளது. அதை நுகர்ந்து வாழ்த்துரைப்பீர்கள் என்றால் வாழ்வேன் வளருவேன். மீண்டும் சந்திப்போம்.

**2019.10.09**
**உடப்பூர் வீரசொக்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



அபிநய சேக்கிழார், ஆன்மிக எழுத்தாளர்
சென்னை. 41, இந்தியா பனையபுரம்
அதியமான்
panayapuramathiyaman@gmail.com

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் புத்தளம் பகுதிகள், தமிழர்கள் நிறைந்து வாழும் பகுதிகள் என்பது இலங்கையை அறிந்தவர்கள் அறிந்ததாகும். இதில் புத்தளம் தனித்துவம் கொண்டதாகத் திகழ்கின்றது. இந்திய வம்சாவழி வந்த தமிழர்கள் வாழும் புத்தளம் மாவட்டம், சிங்கள பெரும்பான்மையினர் வாழும் பகுதியில் அமைந்துள்ளது. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான முன்னேஸ்வரம், புத்தளம் பகுதியில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இராமேஸ்வரம் தீவில் இருந்து 18ஆம் நூற்றாண்டில் புத்தளம் பகுதிக்கு வந்து தமிழர்கள் குடியேறினர். இவர்கள் தமிழகத்தின் பழக்க வழக்கங்களை இன்றும் தொடர்ந்து பராமரித்து வருகின்றனர். மேலும் அங்கே வழிபட்ட தெய்வ வழிபாடுகளும் சிறப்புடன் நடத்தப்படுகின்றன. சிங்களம், இஸ்லாமியர், கிருஸ்துவர் என அனைத்து மதத்தவரோடும், சமய ஒற்றுமையோடு வாழும் பூமியாகவும் புத்தளம் விளங்குவதை வரலாறு உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இப்பகுதியில் தமிழர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் பழங்காலத்தில் இங்கு தமிழர்கள் நிறைந்து வாழ்ந்ததை, இப்பகுதியில் அமைந்துள்ள தமிழ்ப்பெயர்களைக் கொண்ட ஊர்கள் சான்று கூறகின்றன. இதற்கென தனி நூல் எழுதியுள்ளார், நூலாசிரியர் உடப்பூர் வீர சொக்கன் அவர்கள். இதற்கெல்லாம் மகுடமாக, நிலையான சான்றாகத் திகழ்வது, பழைமையான சிவாலயம் விளங்கும் முன்னேஸ்வரம் இப்பகுதியும் உள்ளது. இக்கோயிலுக்காக 61 கிராமங்கள் இருந்ததை வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இச்சிறப்பு மிகு புத்தளம் மாவட்டத்தில், தனிச்சிறப்பு மிக்க தமிழர் வாழும் ஊரான உடப்பூர் மிகவும் தொன்மை வாய்ந்தது. இவ்வூருக்கு உள்ள திரௌபதியம்மன் கோயில், மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில் என மூன்றும் பழைமை வாய்ந்தவை. அத்தோடு சக்தி மிக்க இக்கோயில்களுக்கு நடக்கும் திருவிழாக்கள் மிகவும் பிரசித்தி வாய்ந்தவையாக அமைந்துள்ளன.

இந்தப் புனிதம் நிறைந்த உடப்பு தலத்தில் தமிழ் உணர்வோடும், சமய நல்லிணக்கத்தோடும் தோன்றியவர் கவிஞர். உடப்பூர் வீரசொக்கன். இவரின் அறிமுக நட்பும், ஜெர்மனியில் புகழ்பெற்ற ஹம் காமாட்சி அம்மன் ஆலயத் தொண்டரான சகோதரி திருமதி. மீனா உதயா அவர்கள் வாயிலாகக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப் பற்றி அறிந்த போது, மிகவும் வியப்பாக இருந்தது. இவரின் பன்முகத் திறமைகளை அறிந்து மிகவும் வியந்தேன். கவிஞர், எழுத்தாளர், ஆன்மிக அன்பர், பத்திரிக்கையாளர், நிருபர், விமர்சகர், சொற்பொழிவாளர், நூலாசிரியர் என இவரின் தகுதிகள் கூடிக்கொண்டே செல்கின்றது. இந்திய நாட்டில் இருந்து இவரை நோக்கும் போது, வியப்பும், பிரமிப்பும் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல இன பாகுபாடுகள் உள்ளதாக அறியப்படும் இலங்கையில் மத நல்லிணக்கவாதியாக விளங்குவதை அறிந்ததும் பெருமையாக உள்ளது..

புத்தளம் மாவட்டத்தின் ஊர்ப் பெயர்கள் குறித்து ஊர் ஒன்றின் பேரறிவோம் என்ற இவரின் நூல் ஆய்வுத் திறனுக்குச் சான்றாக அமைந்துள்ளன. இலங்கையில் உள்ள பல்வேறு பெயர்கள் மருவி மாற்றப்படும் சூழலில், இவரது நூல், ஒரு வரலாற்று பொக்கிஷமாகி, வரும் சந்ததியினருக்கு வழிகாட்டியாக விளங்கும். இவரின் செயல்பாடுகளால் இவர் பகுதியில் வாழும் அனைத்து தரப்பு மதத்தினரும் மதித்து வணங்கும் மாமனிதர் என்பது பெருமையாக உள்ளது.

இவரின் கவிதை நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் பன்முக சிந்தனைகள் மேலோங்கி நிற்கின்றது.
ஓங்காரத் தலைமகனே வாரீர் மணக்
கோல வடிவில் மனக்காயங்கள் அகற்றிட
வழிப் பிள்ளையாரே அருள் தருவீர்! வழி
என மாத்தளை விநாயகரை என வணங்குகின்றார்.
(மாத்தளை விநாயகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதுயர் பறந்தோட வேண்டிட
பாங்குடனே அரசாட்சி புரிகின்றவளே!
எட்டாத செல்வங்கள் எமக் களித்து
எமது யர் இடர்களை போக்கியளே!
நட்ட நடு நாயகியாக வீற்றிருந்து
நல்லாட்சி அருளுபவளும் நீ தாயே !
மட்டிலா மகிழ்வு தந்து உடப்பில்
அமைந்தவளே எம் பத்திரகாளிதாயே !
என உடப்பூர் காளியை, வேண்டுகின்றார். (உடப்பூர் பத்திரகாளி )

கொடும் போரில் கொலை யுண்டவர்கள்
அத்தனை உயிர் கள்வாழ்வு பெறவே
பட்ட துயங்கள் பறந்தோட வேண்டி
தீபநா ளாம் இன்நாள் மகிழ்ச்சியை தந்திடாதா ?
என போர்ச்சூழலில் வந்த தீபாவளிப் பண்டிகைக்கு வரவு கூறுகின்றார்.
(கொடுமை அழியாதா)

பட்டம் பதவிக்காக
அலைந்து திரியும்
பாவிகள் வாழும் நாட்டில்
கொள்கையின்றி இருப்பவனுக்கு
கிட்டே வந்து கிடைக்கும்
உயர்பதவியைப் போல.
உண்மை பொய்ப்பதில்லை – தாயே
உத்தமனாய் வாழும் வரை
என்ற வரிகள் இவரின் சமூக சிந்தனையை உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வாழ்க்கை வளம்பெற)

இனங்களின்
வேற்றுமை அழித்தொழித்து
இல்லங்கள் எங்கும்
நல்லறமாக வேண்டி
சனங்கள் படும்
துயரத்தை களைய
பால மைந்தன் ஜேசு வந்தார்! (வழி காட்டி மகிழ்வாய்
பாலா)

என்ற வரிகள், இவர் அனைத்து மத தெய்வங்களையும் மதித்து வணங்கும் மாமனிதர் என்பதை அறிய முடிகின்றது. இவரின் கவிதை நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள், பல்வேறு இதழ்களில் வெளிவந்த கவிதைகளின் தொகுப்பாகும். மொத்தத்தில் உடப்பூர் வீரசொக்கன் கலை, சமூகம், நாடு, ஆன்மிகம் என அனைத்து துறைகளிலும் பயணிப்பது பாராட்டுதலுக்குரியது.

உடப்பூர் வீரசொக்கன் அவர்களின் கவிதை நூலுக்கும், அவர்தம் சீரிய முயற்சிகளை என் இதயங்கனிந்த நல்வாழ்த்துகள் தெரிவித்துக்கொள்வதில் பெருமை கொள்கிறேன்.

ஒரு படைப்பாளனின் வெற்றிக்குத் துணையாக நிற்பது அவரது குடும்பமே. அவர்களின் பேராதரவு இல்லாமல் இவ்வளவு சாதனைகளைச் செய்ய முடியாது. ஆக, இவரின் சீரிய பணிகளுக்குத் துணையாக நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூலாசிரியர் அவர்தம் குடும்பத்தினரும் எல்லா வளமும் பெற்று நலமோடு பல்லாண்டு நல்லுலகில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன். வாழ்த்த வாய்ப்பு நல்கிய நூலாசிரியரும் மீண்டும் நன்றி.

அன்புடன்,
பனையபுரம்
அதியமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ற ஆண்டைப் போல துன்பத்தை தந்திடாதோ!

இன்பத்துடன் வந்தாண்டே!
இரண்டாயிரத்துபத்தொன்பதாமாண்டே!!
இடையினில் துன்பத்தைதந்து
இருளினில் ஆழ்த்திவிட்டாய்
இறையருள் வேண்டியமக்களின்
இன்னுயிர் பறித்துவிட்டாய்
குண்டுவெடிப்புக்களும்
துண்டுஉடல்களும்

எம்மவரின் துயரத்தை
இனிதேபோக்காது
நிம்மதியைகெடுத்தாண்டே...
எம்மைவிட்டு
இன்றேபோய்விடு...!

புதியஆண்டே!
புதினங்கள் தரும் ஆண்டே!!
புத்தம் புதுமலர் சூடி
இரண்டாயிரத்து இருபதை
இன் முகத்துடன் வரவேற்போம்
நத்தம் சமாதானத்தை
நிலைநாட்டவந்தாண்டே!
படுகொலைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் செய்திடு
சென்றஆண்டைப்போல
தொல்லைகளைத் தந்திடாதே...!
பாவங்களைபோக்கி
பாரில் சிறப்பைதந்திடுவாய்
இரண்டாயிரத்து இருபதே!
இன்பமேடுஉன்னைவரவேற்போம்

**01.01.2009**
**வீரகேசரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்கிரம் வந்திடுவாய்

சாந்திபெருகி
சமாதானம் பெருகி
எங்கும் எதிலும் ஏற்றம் கண்டிட
பந்தபாசங்கள் பற்றிபறந்தோட
எந்திரையாளேபாரில் நீவருக!

ஆன்மிகம் தழைத்துஆருண்யம் ஓங்க
சன்மார்க்கம் மலர்ந்துசாதனைபடைத்து
அட்டூழியங்கள் அணைந்துஆலிங்கணம் இணைய
சின்னவளேசிங்காரபெண்ணவளேநீவருக!
இனபேதங்கள் இன்றேமண்ணில் மறைந்திடவே
மனவேதனைகள் மக்களிடத்தில் அழிந்திடவே
கானல் நீரானதுயரங்கள் மனதைவிட்டுபோகிடவே
குணக் குன்றாககுமரிபோலகுவரத்தில் வருக!

அகதிவாழ்வு இல்லாதொழிய
பகல் மதிபோல் பட்டொளிவீசிவரவே
நிகரிலாவாழ்வுநிறைவாகமலர்ந்திடவே
சிகரம் போல் சித்திரையாள் நீவருக!
மறைந்தஉறவுகள் மனதில் விட்டகல!
நிறைந்தவாழ்க்கைக்குநிம்மதியைதந்திட
கரைந்தகண்ணீர் பன்னீராவடிந்திட
சிறையானவாழ்வுமீட்சிபெறசித்திரையாளேநீவருக!

13.04.2010
வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாக வரவேற்போம் சித்திரையாளை

சீர் பெற்ற புத்தாண்டே வருக!
சிறப்புக்களை சீக்கிரமா கொண்டுவா!
பார் போற்றும் உன் வரவால்!
பஞ்சம் பசியை இன்றே அழித்திடுவாய்!
இன்பம் பொங்கும் புத்தாண்டே வருக!
இனிய உறவோடு உன்னை வரவேற்போம்
துன்பம் படைத்த ஆண்டாகயில்லாமல்
புதுமை படைக்கும் ஆண்டாக மலர்ந்திடுவாய்!
வறுமை பேயை நீ ஒழித்திடுவாய்!
வானோர் போற்ற மகிழ்ந்திடுவாய்!
சிறுமை அழித்திடுவாய்! பெருமை காத்திடுவாய்!
சிங்கார சித்திரையாக அவனியில் தோன்றிடுவாய்!
சாந்தி சமாதானம் தந்திடுவாய்!
சமரச சன்மார்கத்தை படைத்திடுவாய்!
சிந்துபாடி சிறுமைகளை அழித்திடுவாய்!
ஏற்றம் தந்து ஏழ்மையை போக்கிடுவாய்!
ஈரின மக்களின் ஒற்றுமை உணர்வை,
இனிதே கொண்டு வந்திடுவாய்!
காரியங்கள் யாவும் மலர்ந்தோங்க
கரவருஷத்தாளை ஒன்றாக வரவேற்போம்

13.04.2011
வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குதூகலமாய் கொண்டாடி வரவேற்று
பட்டாசு கொளுத்தி மகிழ்ந்து
வையம் சிறக்க வாழ்த்தொலி எழுப்பி
வாழ்த்துக் கூறிய எமக்கு
என்றும் காணாத் துயரையும்
இன்னலையும் தந்த இரண்டாயிரத்து
பத்தொன்பதே
உன்னைப் போல் ஓர் ஆண்டு
இனிவர வேண்டாம்

நீ மண்ணில் மலர்ந்த போது
மட்டிலா மகிழ்ச்சி பெற்றோம்
கண்ணீரைத் தருவாய் என
கனவிலும் நினைக்கவில்லை
கொடுமை புரிந்தாய்
கொண்டாடியவனை தொலைத்தாய்
கவலை தந்து எம்மினத்தை
கண்ணீரோடு அகதியாக்கிவிட்டாய்

இரண்டாயிரத்து பத்தொன்பதா மாண்டே
இன்னல்களை தந்த ஆண்டல்லவா நீ
உன்னைப் போல் ஓராண்டு
இந்தமண்ணில் மலர வேண்டாம்!
மறக்க முடியாமறை வினைதந்தாய்
அனுதினமும் உனைமதியோம்
துன்பத்தை தந்தது போதும்
தொலைந்து ஓடிவிடு

**01.01.2017**
**வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி தரும் ஆண்டே வா...

வந்து போகும் ஆண்டுகளை போல்
இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டும்
தொல்லைகளை தந்தாண்டுதான்!
நிந்தனைகளை தந்து
நிம்மதியை குலைத்து
நிர்க்கதியாக்கிவிட்டு
நிலைகுலைய வைத்தாண்டே!
நீ எம்மை விட்டு...
இன்றே பறந்திடுவாய்!
இரண்டாயிரத்து பத்தொன்பதே! நாம்
பட்ட துன்பங்கள்
அடைந்த வேதனைகள்
ஆறாவடுக்களப்பா
சொல்லி மாளாத
வேதனையை தந்திட்டாயே!
எம் பந்த பாசங்களின்
உயிர் பறித்து
பரிதவிக்க விட்ட ஆண்டல்லவா நீ!
இரண்டாயிரத்து இருபதே நீவா
இன்னல்களை தீர்க்கவா
புதுயுகம் படைத்து
புதுதினம் சிறக்க நீ வா
அவனியில் படும் தொல்லைகளை
அறுத்து ஆறுதல் தரவா
சமாதானத்தை கொண்டுவரும்
புது ஆண்டே உன்னை
வரவேற்கிரோம் ஒன்றுபட்டு
நாம் இன்று

**01.01.2011**
**வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களப் புத்தாண்டு!

புத்தாண்டு வந்ததடா..
புவனம் சிறக்க வந்ததடா..
பத்தரை மாற்று பெண்ணாய்..
பாரில் பவனி வந்தாளடா..

ஆனந்தம் கொண்டு வந்தாளடா..
அருதினம் இன்பம் பெருகுதடா..
நித்தமும் அமைதி பெறவே
சமாதானம் கொண்டு வந்தாளடா..

மகிழ்ச்சி பிறந்ததடா..
மனம் போல் வாழ்வு பெருகுதடா..
இன பேதங்கள் ஒழிக்கவே..
இன்ப புத்தாண்டும் வந்ததடா..

சிந்தனையின் செல்வம் பெருகுதடா..
திக்கெட்டும் சிறப்பு மலருதடா..
எத்தனை எதிர்ப்பு வந்தாலும்
அத்தனையும் ஒழிக்க புத்தாண்டு வந்ததடா..!

எட்டுத்திக்கும் புகழ் பரவுதடா..
கட்டும் உறவோடு நவில்கிதடா..
மட்டிலா மகிழ்வு தரவே..
வந்ததே புதுவருட புத்தாண்டு!

ஒற்றுமை கொண்டு வருகுதடா..
சமாதான சந்தோசம் பிறக்குதடா..
மட்டிலா மாண்பை கொண்டு வரவே..
மங்களப் புத்தாண்டை வரவேற்பமடா..

**29.12.2011**
**தினகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லருள் தருவாய் புத்தாண்டே

ஜயம் கூறி வருகின்ற புத்தாண்டே
ஜயம் தருவாய் என போற்றிடுவோம்
பயம் அறிய வாழ்க்கையிலே
பாசத்தை பொழிந்திடுவாய் புத்தாண்டே

நானிலம் போற்றிட நம் வாழ்வில்
நல்லருள் தந்திட வந்திடுவாய்
நாட்டில் செல்வங்கள் பொழிந்தோங்கி
வீட்டில் பாசத்தை விளைத்திடுவாய்

வாழ்க்கை என்பது வாழ்ந்திடவே - எம்
வசந்தம் பூக்க மலர்ந்திடுவாய்
ஏழ்மை நீக்கி இல்வாழ்வில்
இனிமை படைக்க வந்திடுவாய்

காரிருள் அகற்றிடுவாய் புத்தாண்டே
காருண்யம் கொண்டு முகிழ்ந்திடுவாய்
பாரெங்கும் இன்முகம் பூரித்திடவே
பஞ்சம்,பசி இன்றே ஒழிந்திடவே
நெஞ்சுரம் பூண்டு வரவேற்கின்றோம்
வாஞ்சையுடன் மலர்வாய் புத்தாண்டே

புதுயுகம் படைக்க வந்திங்கு
புது வாழ்வை தந்திடுவாய் புத்தாண்டே
இழந்த செல்வஙங்கள் எமை நாட
வழி தேடி தந்திடுவாய் புத்தாண்டே
நாடு நலம் பெற உதித்திங்கு
நல்லருள் தருவாய் புத்தாண்டே

**13.04.2014**
**வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி தரும் மன்மத ஆண்டு

எத்தனையோ சித்திரைகள் வந்தன
வந்து போகின்றன
அத்தனையும் மகிழ்வை தந்தனவா?
இத்தரையில் இழந்த ஒற்றுமையை
இவ்வாண்டில் கொண்டு வந்திடு

முத்திரை பதித்த முதுசம் போல்
முத்தாக உன்னை வரவேற்க
மங்களம் படைக்கும் மன்மத
ஆண்டே மகிழ்வோடு வந்திடு

சொந்தங்களை பிரித்திடாமல்
சோகங்களை விளைத்திடாமல்
பந்தங்கள் பாசங்கள் தழைத்திட
பாங்கான ஒற்றுமை வந்திட

சந்தோஷம் சமதர்மம் பூண்டு
சாதனை கொண்டு வந்திடுமாம்
மங்களம் பொங்கும் சித்திரையாம்
மன்மத வருடமே வந்திடு

அன்பும் அறனும் கரைபுரள
நேயமும் உணர்வும் ஒன்றிணைய
இன்பமும் இனிமையும் மேவிவர
இழிவான செயல்கள் ஒழிந்திட

துன்பம் போக்கி துயரம் அழித்து
இன்னல் இடர்கள் இன்றே மறையவே
மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி தரும்
மன்மதமாண்டே வந்திடுவாய்

12.04.2015
வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியல் பூத்த வீதியெங்கும்
ஒளி வெள்ளம் பரவி நிற்க
மக்கள் வாழ்வில் வசந்தத்தை
தந்திட வா என
அழைப்பு விடுத்தது போல
இன்ப வெள்ளம் எங்கும்
பாய்ந்தோடும் சுப வேளையில்

இத்தரையில் புது வாழ்வாய்
சித்திரை பிறந்தனவே கேளீர்
முத்திரை பதித்தது போல் - முழு
நிலவாய் ஒளிபுரள
அவனியெங்கும் ஆர்ப்பரிக்கும்
இன்ப ஒளி துலங்கிடவே
பத்தரைமாற்று தங்கமாய்
பாவை வந்தாள் சித்திரையாக

அற்புதங்கள் படைத்திடுவாய்
அவனில் கன்னிப் பெண்ணாய்
கற்பனை கொண்டு பார் போற்றிட
கற்போர் மதிக்கும் பெண்ணாய்
ஏற்றம் உய்ய எழில் வடிவில்
எத்திசையும் புகழ் மணக்க
பாட்டிசை பாடி பாவையவள்
வந்தாள் சித்திரையாக

ஆண்டே புத்தாண்டே - நீ
அனுதினம் மகிழ்வை தருமாண்டே
எத்தனை துன்பந்தானும் அத்தனையும்
தீர்க்க வரும் ஆண்டே கன்னி

மன் மத ஆண்டே வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் வாழ்வில் - தீரா
கவலை தீர்க்கும் ஆண்டே
மங்கையின் வாழ்வு மகிழ
மன்மதனாக வந்தாண்டே

பூத்துக் குழுங்கும் மங்கையில்
புதிமை சிறப்பை கொண்டு வா!
நித்தம் வாழ்வில் நிலையான
நிம்மதியை தந்திடு வா!
கத்தான கவிதை பாடி
கவலையை போக்கிட வா!
மன்னவன் போல் மகிழ்வு பெற
மன்மதனாக வந்தாண்டே

**13.04.2015**
**தினகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமகள் வந்தாள்

இன்பம் எங்கும் இனிதே பொங்கிட!
இன்ப சுகம் என்றும் வளர்ந்திட
துன்பம் இல்லா துயரங்கள் ஒழிந்திட!
இன்றே பிறந்தது தைதிரு நாளடா!

மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கிட!
வளமான வாழ்வில் வ்சந்தம் வந்திட
துக்க மெல்லாம் தொலைந்து போய்விட!
தைமகள் வந்தாள் வாழ்வு தந்தாள்

முற்றத்தில் அலங்காரம் முதியவர் வரைந்திட!
முக்கனி படையளை முத்தினம் பொழிந்திட!
உள்ள உறவுகள் கூடி மகிழ்ந்திட
இன்றே லந்தாள் தைத்திருமகளாய்

உழைப்போர் போற்றிடும் உன்னதத்திருநாளடா!
உழவர் மகிழ்ந்திடும் தைத்திருநாளடா!
தையும் பிறந்தது போல் வாழ்வும் மலர்ந்ததடா
தரணி சிறப்பிக்க தைமகள் வந்தாளடா!

பொங்கி பூரிக்கும் தைத்திருநாளடா!
தமிழனின் வாழ்வை உயர்த்தும் திருநாளடா!
எங்கள் பெருமை இனிதே உயர்ந்திட
இன்றே பொங்கி பூரித்து மகிழ்வோமடா!

**14.01.2010**
**தினகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாள்! பெருமை தந்தாள்

இன்பம் எங்கும் இனிதே பொங்கிட
இன்பசுகம் என்றும் வளர்ந்திட
துன்பமில்லா துயரங்கள் ஒழிந்திட
இன்றே வந்தது தைத்திருநாள்
மக்கள் உள்ளங்கள் மகிழ்ச்சி பொங்கிட
மணவாழ்வில் மங்களம் பொங்கிட
துயரங்கள் எல்லாம் தொலைந்து போய்விட
தையவள் வந்தாள் வாழ்வு தந்தாள்
முற்றத்தில் அலங்காரம் கன்னியவர்
கரைத்திட முக்கனி படையல் முன் நிறைந்திட
குற்றமில்லா உறவுகள் கூடி மகிழ்ந்திட
தைமகள் வந்தாள் வாழ்வு தந்தாள்
உழைப்போர் போற்றிடும் உள்ளத்திருநாளாம்
உழவோர் மகிழ்ந்திடும் தைத்திருநாளடா
நன்றி பெருக்கின் நினைவு நாளடா
நயமோடு போற்றும் நன்நாளடா
பொங்கி மகிழும் தைத்திருநாளடா
தமிழன் வாழ்வில் உயரதிருநாளடா
எங்கள் பெருமை இனிது உயர்ந்திட
இன்றே பொங்கிடுவோம் மகிழ்ச்சிகள் கண்டிடுவோம்

**14.01.2006**
**வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றி மகிழ்வோம்

இன்பம் எங்கும் இனிதே பொங்கிட
இன்ப சுகம் என்றும் வளர்ந்திட
துன்பம் இல்லா துயரங்கள் ஒழிந்திட
இன்றே பிறந்தது தைத்திருநாள்

மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கிட
வளமான வாழ்வில் வசந்தம் வந்திட
துக்கமெல்லாம் தொலைந்து போயிட
தைமகள் வந்தாள் வசந்தம் தந்தாள்

முற்றத்தில் அலங்காரம் முகிழ்ந்து பொழிந்திட
முக்கனி படையல் முன்னோர்க்கு படைத்திட
உள்ள உறவுகள் கூடி மகிழ்ந்திட
இன்றே வந்தாள் தைமகளாள்

உழைப்போர் போற்றிடும் உன்னத திருநாளடா
உழுவோர் மகிழ்ந்திடும் தைத்திருநாளடா
தையும் வந்ததடா வாழ்வும் சிறந்ததடா
தரணி எங்கும் போற்றும் தைநாளடா

பொங்கும் நாளாம் தைமாத நாளடா
தமிழன் வாழ்வில் உயர்வு திருநாளடா
எங்கள் பெருமை இனிதே உயர்ந்திட
இன்றே பொங்கி மகிழ்ந்து போற்றிடடா

**10.01.2009**
**தினகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையவள் வந்தாள் தரணி சிறக்க

தையும் பிறந்தன வாழ்வும் மலர்ந்தன
தரணி சிறக்க பொங்கி மகிழ்ந்திடுவோம்!

ஒழிந்தன தீமைகள் அழிந்தன வறுமை
பறந்தன துயரங்கள் வளர்ந்தன உறவுகள்
பிறந்தன பாசங்கள் அணைத்தன கரங்கள்
வாழ்வும் மலர்ந்தன போல் மகிழ்ச்சியும்
வந்தனவே!

தையும் பிறந்தன வாழ்வும் மலர்ந்தன
தரணி சிறக்க பொங்கி மகிழ்ந்திடுவோம்!

வறுமை ஒழிந்தன வாழ்த்துக்கள் வந்தன
சிறுமை பறந்தன சிறப்புக்கள் சிறந்தன
கருமை களைந்தன கருண்யம் கருவுற்றன
தருமம் தழைத்தது போல் பொங்களும்
வந்ததுவே!

தையும் பிறந்தன வாழ்வும் மலர்ந்தன
தரணி சிறக்க பொங்கி மகிழ்ந்திடுவோம்!

ஒற்றுமை கண்டன ஓரணியாய் திரண்டன
மாற்றங்கள் வந்தன மகிழ்ச்சி பூத்தன
ஏற்றங்கள் நிறைந்தன ஏழ்மை மறைந்தன
நானிலம் சிறந்தது போல் பொங்கி பூரிப்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் பிறந்தன வாழ்வும் மலர்ந்தன
தரணி சிறக்க பொங்கி மகிழ்ந்திடுவோம்!
விடியல் பிறந்தன விழிப்பு பெற்றன
அடிதடி அழிந்தன ஆசைகள் ஆர்ப்பரித்தன
ஓடோடி உழைத்தன ஒன்றாக ஓய்ந்தன
ஒன்றுபட்டுழைப்பது போல் புவனம் பொங்க
பொங்குவோமே!

தையும் பிறந்தன வாழ்வும் மலர்ந்தன
தரணி சிறக்க பொங்கி மகிழ்ந்திடுவோம்!

தையும் பிறந்தன வழியும் வந்தன
வதையும் அழிந்தன வசந்தமும் பூத்தன
எதையும் தாங்கும் மனமும் மகிழ்ந்தன
உதைத்தில் எழும் பரிதியைப்
போல் தையவள் வந்தாள்!

**14.01.2011**
**தினகரன் பொங்கள் மலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் வாழ்வு தந்திடுவீர்

பாரெங்கும் ஒளிவீசும் பகலவனை
பால் பொங்கலிட்டு வரவேற்போம் - அவனில்
ஆனந்தமெங்கும் அன்பு பொழிய
அருதினமும் பொங்கி மகிழ்வோம்
நல் வாழ்வு மலரவே...!
நற் கருமங்கள் ஓங்கிட
நாணிலம் போற்றி
நலமுடன் வாழவே...!
கற்றுணவோர் புகழ்
காரியங்கள் வெற்றிபெற
பொங்கலிட்டு பூரிப்போம்
வந்து போகும் ' தை' யவளாகாமல்
உன்னை வாழ்த்து கூறும் மரபை நீக்கி
எம் வாழ்வு நலம் பெறவோ
புதுவாழ்வு பூத்துக் குலுங்க...
மெய்ப்பிப் போம் உழைப்பை
கொண்டு...
வறுமை போக்கும்
தைமகள் வந்துதித்தாள்
பாரம்மா எம்மின குலமகளே
வந்தம்மா குறை தீரம்மா
பாவப்பட்ட இனமில்லா
பஞ்சம் பசி தீரம்மா பிறந்துவிட்ட தையவளே...
நல்வாழ்வு தாரம்மா...!

**14.01.2012**
**மித்திரன் வாரமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னப்பாவே வந்துவிடு

அப்பாவே..!
பாவியாக எம்மைவிட்டு
பாசத்தை துறந்துவிட்டு
பணவாசை பூண்டு
பச்சிளம் பாலகனாம் எம்மை
பரிதவிக்க விட்டுவிட்டு
பாரில் தவிக்கவிட்டு
வெளிநாட்டு வேகத்தில்
எம்மை விட்டு
ஏனப்பா சென்றீர்!

உன் தயை நாடி நாம்
கண்ணீரிட்டு கதறி
அழுகின்றோம் துவழுகின்றோம்
எம்..!
அபயக் குரல் தம்காதில்
விழவில்லையா..!

என்தந்தையே!
அன்புமொழி பேசி
ஆரத்தழுவி எம்மை
ஆசைவார்த்தை கூறி
அனுதினமும் எமையணைத்த
ஆசையப்பா..
எம்போ! நீ வருவீர்..!

பணத்தை தேடலாம்
பாசத்தை தேடலாமா?
உறக்கத்தை வரவலைக்கலாம்
உறவன்பை பெற முடியுமா?
நெக்குறுதி நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை..காண
நெஞ்சுறுகி வந்திடுவாய்..

என் தங்க தாத்தா..
தாளா உன் வரவு
தவிக்கின்ற நெஞ்சங்களுக்கு
பணமல்ல எந்தனுக்கு
உந்தன் வரவல்லவா எனக்கு தேவை!

தகப்பனில்லா பிள்ளை என
வசைமொழி ஓர்பக்கம்
நேசமில்லா உள்ளமென
நெஞ்சுறுகும் மனம் மறுபக்கம்
இத்தனையும் எந்தனுக்கு
ஏமாற்றம் தானே அப்பா!

பெற்றமனம் கல்லாகி
பிள்ளைமனம் பித்தாகி
சொந்தமில்லா பந்தமில்லா
பாவியாகிவிட்டு
எம்மை காண வேண்டி
என்னப்பாவே
வந்துவிடு!

2010.12.05
ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலை நினைத்தால் உள்ளம் கொதிக்கிறது...

நீலக்கடலில்
நீந்தி விளையாடி..
நிம்மதி பெருமூச்சிட்டு
குதூகளித்து..
குசலம் விளையாடி
மகிழ்ந்தோமே..மா கடலே..!

சுகாமியாக வந்து..
சொந்தங்களை பரித்து..
உயிர்களை காவுகொண்ட கடலே..!
உன்னைக்கண்டு..
வேதனைப்படுகின்றேன்..
வெக்கப்படுகின்றேன்..
விசனப்படுகின்றேன்...!

உன் அழகில் மகிழ்ந்தேன்
கவினூர் காட்ச்சியைக்
கண்டு புகழ்ந்தேன்
வனங்களை கண்டு
புனங்காகிதமுற்றேன்
இத்தனை செல்வங்கள்
இருந்தும்
சுனாமியாக வந்து
உயிர்களை
பலிகொண்ட
பாவி நீயல்லவா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் தாயே..!
கருணையுள்ளம்
பூண்டவளே
கருண்ய சீலம்
பெற்றவளே
அமைதியுடன்
அலையோ
ஆர்ப்பரித்தவளே!

அமைதிக்கு பெரும்
அடக்கதுக்கு புகழாரம்
கொண்ட கடலே..
ஆர்ப்பரித்து..அட்டூழியமும்
அராஜகம் புரிந்து
சுனாமி வடிவில் வந்தெம்மை
சங்காரம் செய்த கடலே..!
உன்னை நினைத்தாலே
உள்ளமெல்லாம்
கொதிக்கிறதே..!

**2013.12.22**
**வீரகேசரி வார இதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நிலைக்க வேண்டும்

பாவிகள் நிறைந்த உலகில்
பரிதாப கூட்டத்தை விட்டுவிழகு
போலி உடை தரித்த
பொய்யர்களை இன்றே மற

ஊன்உறக்கம் கொண்ட
உழைப்பாளிகளை மறந்திடா
சோம்பேரி கூட்டத்தை
கொஞ்சமேனும் நிகைத்திடாதே..!

பாடித்திரிந்த பாவையாளை
பாங்குடனே அனைத்திவிடு..!
தேடிவந்து உறவுகொள்ளும்
தேவடியாளை அன்றே விட்டுமற

நயவஞ்சகம் செய்ய நாடும்
நண்பனை விட்டுமற!
பயம் வந்த போதெல்லாம்
பரந்தாமனை நினைத்துவிடு

கண்ண குமிழ் கொண்ட
காரிகையை கடுகளவும் நினையாதே
எண்ணமெல்லாம் எமைநினைக்கும்
ஏந்திழையாளை என்றும் மறந்திடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யும்
எட்டப்பர்களை மறந்து விடு
கண்டதே காட்ச்சி கொண்ட
கன்னியவளை விட்டு மற!

நல்லவனாக நடிக்கும்
நயவஞ்சகனை நாளும் மற
கள்ளப்பார்வை கொண்ட
கயவனை கடுகளவும் என்னாதே!

உள்ளொன்று வைத்து
புறம் கூறுபவனை உள்ளலடியும் நினையாதே
எல்லையில்லா அன்பு கொண்ட
ஏந்திளையாளை என்றென்றும் மறவாதே!

இருமனம் கொண்ட காதலர்கள் போல்
என்றும் உறவுகள் மாறாதிருக்க வேண்டும்
இனபேதமில்லா எம்வாழ்வு
என்றும் நிலைக்க வேண்டும்

**08.12.2013**
**வீரகேசரி வார இதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்திட உழைப்போம்

உண்மையை பேசி உத்தமனாக வாழ
பொய்யுரை கூறுகின்றேன்
எண்ணிய எண்ணங்கள் ஈடேர
ஏந்தி பிழைக்கின்றேன்

தன் நலமே பொது நலமென
சுயநலம் பேசுகின்றான்
கள்ள கபட புத்தியோடு
காரியங்கள் செய்கின்றான்

மனம் போன போக்கினால்
மதி கெட்டு வாழ்கிறான்
ஏனோ தானமாக நின்று
எட்டப்பனாகி விட்டான்

போட்டி பொறாமை வஞ்சம்
தீர்க்கும் கெட்டவனாகி விட்டான்
காட்டி கொடுக்கும் மனம்
இல்லாதவனாக பழகுவோம்

வன்முறை வஞ்சம் இல்லா
உத்தமனாக வாழவே
முன்மாதிரி கொண்டு
முதுசமாக முகிழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட காதல் கொண்ட போது
சீரழிந்து போதை பார்
இருமனம் கொண்ட இதயத்தால்
இல்வாழ்வு காண வாரீர்!

மக்கள் சேவை மகோன்ன
சேவை என மகிழ்மை போய்
எக்காலமும் சொல்லும் சேவை
என மக்களிடம் எடுதடதோம்புவேம்

உழைப்பை உயிர் நாடியென
உறுதி கொண்டிழைப்போம்
பிழைப்பை நாடாமல் இருக்கும்
கயமையாளனை வெறுப்போம்

நாளைய உலகு நம் கையில்
தான் என கொள்வோம்
இன்றைய தலைமுறை உயர்
வென்றெண்ணி உழைத்துயர்வோம்

**01.01.2013**
**தினகரன் இதயவாக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுபோற்ற மகிழ்ந்தோம்

எத்தனை இன்னல்கள் வந்தாலும்
அத்தனையும் கானல் போல் மறைந்தாலும்
முத்தான முதுசம் காண வேண்டிட
மற்றவர் மதிக்க வாழ்வோமடா...நம்
இனத்தாரை போற்றி மதிப்பமடா..
உயர்வின் பெயரால் வாழ்வோமடா..

சொத்திழந்து சுகமிழந்து நின்றாலும்
சொந்தபந்தங்கள் நிலைகுலைந்து வாழ்ந்தாலும்
சோர்வு கொள்ளா சமூகமாக வாழா
உயர்வு கொள்ள வேண்டுமடா...இன
உணர்வு கொண்டு நிற்போமடா..
உயர்ந்தோம் போற்றி நிற்பமடா...

அகமிலா வாழ்வோடு வாழ்ந்தாலும்
அறிவை ஒருபோதும் இழப்போமடா..
பிரிவு இல்லா சகோதரமாக
வந்த துயர் மதிப்புடன் அகழ்கிறதடா..
மாற்றான் வஞ்சகத்தை மனதில் மறப்பமடா..
கற்றவனாகி காயத்தை ஒட்டுவமடா..

நிலையில்லா வாழ்வில் கெடுத்தாலும்
நிச்சயம் உயர்வு வந்தே தீருமடா..
நிலையான சமாதானம் வந்து
சகோதர உணர்வு பிறந்திட பாரடா..
சந்தோசம் கொண்டு வந்ததடா..
சமாசம் பூண்டே என கொண்டாடுவமடா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாளெல்லாம் பிறவாத நாளன்று
பித்தனாகி விட்டோமென மகிழ்வோமடா..
பிஞ்சி மழலை போல் நினைப்பமடா..
இன வேறுபாடு இல்லா நாடென்று - நம்
நிம்மதி பெருமூச்சை விட்டு வாழ்ந்தோமடா..

# விகாரியே வருக...

சிந்தை சிறக்கும் சித்திரையாளே
சீரான ஜய வருடமாய் வந்தவளே
பந்தத்தை விதைக்கும் பாவையாளே
பாங்குடகே பாரில் உதித்தவளே
இத்தரை மாந்தரின் ஒளியாக
நலம் பெறவே தந்திடுவாய்
பத்தரை மாற்று பசும் பொன்னாக
பாவையா ஜயவருடமே வந்தனைவாய்

இட்ட துயர் இன்றே ஒழிந்திடவே
ஏழை துயரையும் தீர்த்திடுவாய்
பட்டவரின் பாட்டை பழித்திடவே
பாரினில் தவழ்ந்து பிரகாசிப்பாய்
கட்டமரம் போல் தழைத்திடவே
காருண்யம் தந்து மகிழ்ந்திடுவாய்
எட்டு திக்கும் உன் புகழ்
எல்லா உள்ளங்களில் ஏற்றிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் வீடும் நல்லருள் பெற
நாளும் துதித்தோம் உன் வரவால்
காடும் மலையும் வளம் பெற
கருணை அருளை தந்திடுவாய்
பாடும் பக்தனின் பக்தியாளே
பாங்குடனே உன்னை வரவேற்றோம்
தேடி வந்தோம் நிம்மதி காண
உன் வரவு கண்டேன் பேரானந்தம்

வாட்டும் வரட்சி கொடுமையகல
வந்தாளே ஜய சித்திரையாள்
பட்டாசு எங்கும் ஓங்கி ஒலிக்க
மத்தாப்பு ஒளியும் பிரகாசித்தனவே
நாட்டம் கொண்ட நம்வாழ்வு
நாளும் உன்னை போற்றிடுவோம்
பட்ட துயர் இன்றொழிகவே
பாரில் தவழ்ந்தாளே ஜயா

**12.04.2014**
**தினகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாளே ஜயசித்திரையாள்

எத்தனையோ சித்திரைகள் வந்தன
அத்தனையும் நித்திரையாகி சென்றன
மற்ற ஆண்டுகள் செய்த பாவங்களை
நீக்கி மகிழ்வோடு இத்தாண்டே
வந்திடுவாய்...

இத்தரையில் இழந்த ஒற்றுமையை
இப்புத்தாண்டே இனிமையுடன்
கொண்டு முத்திரை பதித்த முதுசமாகி
சித்தமாக சிறப்புக்களை தந்திட
வித்தகி வடிவாகி உதிக்கும்
விகாரி ஆண்டே உனை
வரவேற்போம்...

சொந்த பந்தங்கள் வேறான்றி
சோகத்தில் உறவுகள் பிரிவுகளின்றி
சிந்தனைகள் எம்மத்தியில்
விளைத்திடாமல்
வருத்தங்கள் எசாத்தில் வராமல்
விந்தைகள் இல்லா இவ்வுலகில்
விருப்போடு வந்துதித்தாள்
"விகாரி பெண்ணவள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் அறனும் அலைமோத
அன்னியோன்ய நேயங்கள் நிறைவேற
இன்பமும் இனிமையும் மேவிநிற்க
இல்வாழ்வு இனிதே சிறப்பேக
துன்பங்கள் துயரங்கள் பறந்தோடவே
உண்மைகள் உயர்வுகள் உயர்ந்திடவே

ஒற்றுமை இனமாக நாம் வாழ்ந்திடவே
எண்ணிய ஏண்ணங்கள் எழுச்சியடையவே
ஏற்றங்கள் எம்மிடத்தில் வந்தடையவே
விண்ணோர் போற்றிடவே
விகாரியே விருப்போடு வந்திடுவாய்...

**07.04.2019**
**வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரங்கள் வர வேண்டும்

பாடசாலை செல்லாது படிக்காத
மாணவர் கூட்டம் வேண்டாம்
மடமை பேசி மதமயக்கும்
மாற்று திரனாலியும் வேண்டாம்

ஆசைக்கு அடிபணி வேசம்போடும்
ஆப்த நண்பனும் வேண்டாம்
பூசைக்கு வேசம் போட்டுழைக்கும்
பூசாரியும் எமக்கு வேண்டாம்

நாளைய தினத்தை நாசமாக்கும்
நண்பனின் நட்பும் வேண்டாம்
பாலை ஊட்டி பாசம் கொள்ளும்
பாவையர் கூட்டம் வேண்டாம்

காலத்தை ஏமாற்றி கவிபாடும்
கவிஞனும் நமக்கு வேண்டாம்
நலத்தை வேண்டி நாடோறும் துதிக்கும்
நயவஞ்ச அடியாரும் வேண்டாம்

உள்ளொன்று வைத்து புறம்பாடும்
உத்தம உறவுகளும் வேண்டாம்
பற்றொன்று சொல்லி சூசுமம் செய்யும்
பங்காபாவிகளும் இனி வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவன் போல் நடித்து நாசம்செய்யும்
நண்பர் கூட்டமும் வேண்டாம்
வல்லவனுக்கு புல்லும் ஆயுதமென்று
சொல்லும் நடிப்பனும் வேண்டாம்

ஏழைகளை சுரண்டி ஏப்பமிட்டுவாழும்
எட்டப்பர்களும் வேண்டாம்
பழைமைகளை சொல்லிப்பாடும்
பாடகனின் பாட்டும் வேண்டாம்

சாதனை சொல்லி வேதனைதரும்
பகையாலனும் பாரில் வேண்டாம்
நாதனை பாடி நர்த்தம் ஆடும்
நாட்டி நாத்தகியும் வேண்டாம்

பணம் பணம் பாடித்திரியும்
பரதேசி பாடகனும் வேண்டாம்
தானம் தானம் என்று தானம் வழங்கும்
தனபந்தவனும் தரணிக்கே வேண்டாம்

மாற்றாம் தோட்டத்து மகிமை மதிக்கா
அறிவாளியும் மண்ணில் வேண்டாம்
மாற்றத்தை விரும்பி வாக்களிக்கா
வாக்காளரும் வேண்டவே வேண்டாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையில் வந்த இன்பம்

பள்ளி செல்ல பாலகனுக்கு
வந்த ஆசை...!
பாடம் படிப்பிற்கும் ஆசானுக்கு
கொள்ள ஆசை...!
அல்லி அணைக்கும் ஆடவனுக்கு
காதல் ஆசை...!
சொல்லி கொடுக்கும் தொண்டனுக்கு
சொந்த ஆசை...!
பணம் தேடும் ஆசை வந்தவனுக்கு...!
பேர் ஆசை...!
பாட்டுப் பாடி உழைக்கும் பாடகனுக்கு
பண ஆசை...!

பிள்ளை பெறும் தம்பதிகளுக்கு
பேரின்பம்...!
கள்ள காதலியை கரம்பிடிப்பவனுக்கு
தாலா இன்பம்...!
பரீட்சையில் சித்திபெற்றவனுக்கு
வாழ்நாள் இன்பம்...!
மேடையில் பொய்சொல்லும்
அரசியல்வாதிக்கு
வாக்குமேல் இன்பம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணைக்கும் உள்ளம்

உள் ஒன்று வைத்து புறம்
கூறும் நண்பனை வெறுப்பேன்
ஊரார் பிள்ளையை ஊட்டி
வளர்ப்பதை நான் அணைப்பேன்!

சீதனம் கேட்டு சீரழிக்கும்
இளைஞர் கூட்டத்தை வெறுப்பேன்.
காரணம் சொல்லி காலத்தை
நகர்த்தும் கன்னியவளை
அணைப்பேன்!

கோள் சொல்லி குடும்பத்தை
கலைக்கும் சீரழிப்பாளை வெறுப்பேன்
பால்மனம் மாறாத பைங்கிளி
பாவையவளை பாசத்துடன்
அணைப்பேன்!

கொஞ்சு மொழி பேசி கெஞ்சி
விளையாடும் வஞ்சக பேடியை
வெறுப்பேன்
என்றும் மதிக்கும் நல்லமனம்
கொண்ட இனியவளை அணைப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளை இல்லா கூட்டத்தின்
தலைமை பதவி வகிப்பவனை
வெறுப்பேன்
நல்லதைச் செய்யத் துடிக்கும்
நலமானவனை நான் அணைப்பேன்!

கண்டதே காதலென கொண்டதே
கோலமென வாழும் கன்னியவளை
வெறுப்பேன்
பெற்றோர் பேசி நல்வாழ்வு
வாழும் தம்பதிகளை நான்
அணைப்பேன்

பதவிக்கும், பட்டத்துக்கும்
அந்தஸ்துக்கும்
அடிபணியும் கூட்டத்தை வெறுப்பேன்
கனம் பண்ணி காரியம் ஆற்றும்
கண்ணியமானவளை நான்
அணைப்பேன்!

பெருமனம் கொண்டவர்கள் இரு
மனத்துடன் வாழ்பவர்களை
வெறுப்பேன்
இல்லறமே நல்லறமாக வாழும்
தம்பதிகளை நான் அணைப்பேன்.

மெட்ரோ NEWS 2011.10..28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிப் பெண்

எத்தொல்லைகள் வந்தாலும்,
அத்தனையும் பொறுத்திடுவாள் - நம்
துயர் காத்திடுவாள்
மூத்தவரை மதித்திடுவாள்
மனம் குளிர செய்திடுவாள் - பிறர்
குறை தீர்த்திடுவாள்.

கந்தைத் துணியானாலும்,
காலத்துடன் வாழ்ந்திடுவாள் - மற்றவரை
மனம் கோணாமல் நடத்திடுவாள்:
சிந்தனை கொண்டுவாள்: நித்தம்
என்னிடத்தில் வாழ்ந்திடுவாள்:

கொண்டவனை போற்றிடுவாள்:
கொள்கையுடன் வாழ்ந்திடுவாள் - என்றும்
உறவோடு வாழ்ந்திடுவாள்
ஒருவனுக்கு ஒருத்தியென
ஒற்றுமை கண்டிடுவாள் - இனதே
இல்லறம் பூண்டிடுவாள்:

தினக்கரன்:-2011.05.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்தை ஏற்றிடுவோம்

வரிசை என தீபங்கள் ஏற்றி
திக்கெட்டும் துயரங்களை அழித்திடுவோம்
திங்கள் போல் தீப ஒளி வீசிட
சிறப்பான வாழ்வொன்றை அமைத்திடுவோம்
இன்பம் அது பொங்கிட
இருளகற்றும் தீபமதை ஏற்றிடுவோம்..
துன்பமது அகன்றிட துயரங்கள் ஒழிந்திட
இன்ப வாழ்வு மலர்ந்திட
நலம் தினம் பெற்றிட
நாச எண்ணங்கள் ஒழிந்திட
அன்புடன் அறனும் அவனியில் செழித்திட
ஆன்ம நேய தீபத்தை ஏற்றிடுவோம்
நாட்டினில் ஒற்றுமை ஓங்கிடவே
நானிலம் போற்ற வாழ்ந்திடவே
உரிமைகள் யாவும் பெற்றிடவே
தீட்டிய எண்ணங்கள் எட்டிடவே
தீபமதை ஏற்றி இன்னாளினை மகிழ்வென
கொண்டாடுவோம்..

2009.10.29
மித்திரன் வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் தீபம் ஏற்றுவோமடி

வாருங்கடி வந்து கூடுங்கடி
வாழ்த்து கூறி தீபமேற்றுங்கடி
பாடுங்கடி பஞ்சம் பறந்தோடிட
பார் எங்கும் தீப ஒழி பாச்சுங்கடி
எடுங்கடி எம்மின் ஏழ்மை போக்கிட
எங்கும் இன்ப ஒளி ஏற்றுங்கடி
நாடுங்கடி நாட்டு சமாதானம் வந்ததென
நாமும் ஒற்றுமை தீபமேற்றுவோம்
வந்ததடி வழமை போலில்லாத
இத்தீபாவளியும் வந்ததடி
கத்துங்கடி காலத்திற்கேற்றதோர்
இன்ப தீபஒளி தந்ததடி
ஓடுங்கடி ஒற்றுமை தந்த தீப
நாளாக கொண்டாடுங்கடி
மகிழ்வோம் மடு மங்களம் பிறந்த
நாளது என மதிப்போமடி!
தொல்லைகள் இன்றே தொலைந்ததடி
தொட்ட குறை இட்டகுறை தீருமடி
இல்லங்களில் இல்வாழ்வு சிறக்குதடி
இனவேறுபாடு இன்றே ஒழிந்ததடி
எல்லையில்லா தொல்லை போகுதடி
ஏர் முனை சென்று உழைப்போமடி
நாட்டில் வளமுடன் வாழ்வோமென
நாமும் தீபம் ஏற்றுவோமடி!

2002.11.04 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமோடு தீபம் ஏற்றுவோம்

வாருங்கடி! வந்து பாடுங்கடி!
வாழ்த்து கூறி தீபம் ஏற்றுங்கடி!
பாடுங்கடி! பஞ்சம் பறந்தோடுதடி!
பார் எங்கும் தீப ஒழி பாச்சுங்கடி!
எடுங்கடி! எம்மின ஏழ்மை போகுதடி!
எட்டுத்திற்கும் இன்பஒளி ஏற்றுங்கடி!
நாடுங்கடி! நாட்டில் சமாதானம் வந்ததென
நாமும் ஒற்றுமை தீபம் ஏற்றுவோமடி!

வந்ததடி! வசந்தம் தந்ததடி!
வளமான வாழ்வு பிறக்குதடி!
பந்தமடி! பாச பிணைப்புக்குள்ளே
பாங்கான உறவுகள் இணைந்ததடி!
ஓடுங்கடி! ஒன்றுபட்டு விட்டோமென
ஓரங்கார ஒளிதீபம் வந்ததடி!
மகிழ்வோமடி! மட்டிலா வாழ்வுமலர்ந்ததென
மங்கள தீபத்தை ஏற்றுவோமடி!

தொல்லைகள் இன்றே தொலைந்ததடி!
தொட்டதெல்லாம் இன்றே மலர்ந்ததடி!
இல்லங்களில் இல்வாழ்வு சிறக்குதடி!
இனவேறுபாடு இன்றே ஒழியுதடி!
எல்லையில்லா தொல்லை போகுதடி!
ஏர்முனை சென்று உழைப்போமடி!
நல்வாழ்வு வாழ வேண்டுமடி!
நாமும் நலமான தீபம் ஏற்றுவோமடி!

2005.11.01 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாடுவோம் தீபாவளியை

ஊரெல்லாம் இன்ப தீபநாள் வந்ததென்று
உள்ளமெல்லாம் மகிழ்ச்சி ஒளி எழுப்பி நிற்க
நல்லோர் போற்றும் நல்லநாளை போற்றி
நாமும் கொண்டாடி மகிழ்வோமம்மா

ஆடி வருகின்றாள் தீப நாளன்று
பாடி மகிழ்ந்திடுவாள் ஒரு மனதுடன்
நாடி வந்தாளாம் நல்லோர் போற்றிட
கூடி கொண்டாடுவோம் தீப நாளென்று கூறி

போரோய்ந்து பொல்லாப் பிணிகள் அழிந்து
கார்முகில் வண்ணன் கண்ணனை துதித்து
பார் போற்றும் வெற்றி நாளது
பொங்கும் மங்களமாக தீபாவளி வந்ததுவே!

சொந்தங்கள் சேர்ந்து இணைந்து மகிழ்ந்திட
பந்தங்கள் பாங்கோடு பட்டாசு கொளுத்திட
கந்தன் கருணையை வேண்டி நின்றிட
எந்தக் குறையும் போக்கிடும் நன்நாளிதே!

யுத்தம் ஒளிந்திட உறவுகள் சேர்ந்திட
நித்தம் பயமும் இன்றே ஒழிந்திட
கடல்போல் கருணை பொழிந்திட
நிரந்தர சமாதானம் நீடித்து நிலைத்திட
கூடி மகிழும் உன்னத தீப நாளாம்!

2008.10.27 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமைகள் அழியாதா?

வந்துபோகும் தீபாவளியைப் போலில்லாமல்
இந்த தீபாவளி ஒழியைத் தந்திடுமென
ஏங்கி துயருறும் உள்ளங்களுக்கு
மகிழ்ச்சியை தந்திடும் தீபாவளியே வா!

கொடும் போரில் கொலையுண்டவர்கள்
அத்தனை உயிர் கள்வாழ்வு பெறவே
பட்ட துயரங்கள் பரந்தோட வேண்டி
தீபநாளாம் இந்நாள் மகிழ்ச்சியை தந்திடாதா?

குண்டு போட்டு கொடுமை புரிந்ததால்
மாண்டு மடிந்த உயிர்கள் எத்தனையோ!
ஆண்டுபல சென்றாலும் வாழ்வில்
மகிழ்ச்சியாவது இந்நாளில் பிறக்காதா?

கொண்டொழித்த அரக்கனின் அட்டூழியங்கள்
அவன் வழிவந்த ஹம்சனின் துயரங்கள்
அன்றே அழிந்த அதர்மத்தை போல
இன்றே இடம்பெறும் கொடுமைகள்
அழியாதா?

சுற்றத்தார் வடித்த துயரங்கள் அணைய
வஞ்சகக் கொடுமையாளரின் வக்கிரம் அழிய
பட்ட துன்பங்கள் பறந்தோட ஒளிநாளில்
பரந்தாமா உன்குரல் ஒலிக்காதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைத் துன்பியலில் வெந்துமடிவதை
வேற்று நாட்டார் ஆணைபறந்ததும்
கருனைக் கடவுளாம் கண்ணனின் அருளால்
நேசகுரலாக தீபஒளி பிறந்திடாதா?

இருள் சுழ்ந்த கொடும் போர் ஒழிந்து
இன்றே ஒளியும் பிறந்ததை
மலரும் கனவு அந்த நாளை வேண்டி
வாழ்த்துக் கூறும் நாளாக வந்ததே தீபநாள்.

2008.10.27 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு பிரான் வந்தாதே

பாரெங்கும் ஒளி தீபமேற்றி
பாலகன் இயேசு பிறந்தார்
காரிருள் அகல வேண்டி
கர்த்தராம் இயேசு உதித்தார்

கடும் குளிர் அவனில் பரவ
மார்கழி திங்கள் மாண்புறவே
படுபாவங்கள் இன்றே மறைய
மாட்டுத் தொட்டிலில் பிறந்தாரே பாலர்

கண்ணின் கருமணி போல் பரவ
மண்ணில் மாந்தர் மகிழவே
திங்களாக வந்து எம்மை ஆட்கொள்ள
இன்றே பிறந்தாரே இயேசு மகான்

கன்னி மரியாவின் தவப் புதல்வனே
காத்தருள பாரினில் வந்த பெருமகனே
பாவங்கள் தீர்க்க வந்த பாலகா
பாரெல்லாம்உன் புகழ் தானப்பா

நானிலம் போற்றும் நந்தாரில்
நன்மை புரிந்த நாயகனே
தேனிலும் தெவிட்டாத உன் புகழ்
உமது நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் எங்கும் மணம் பரப்ப
தாரக மந்திரத்தை
விளைவித்தவரும் நீரே
உலகம் போற்றும் உத்தமராய்
வந்துதித்தார்
இயேசு பிரான் இம்மண்ணில்
கேட்போருக்கெல்லாம்
கேட்டவரம் தருவோமென
தட்டும் போதெல்லாம்
திறக்கும் மெனவும்
எட்டுத் திக்கும்
உமது நாமம் ஒலிபரப்பவே
இயேசுபிரான் வந்தாரே மண்ணில்

2011.12.30 மெட்ரோ செய்திதாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் அரவணைப்பு..

மழலையாக மண்ணில் தவழ்ந்த..
போது மகிழ்ந்து நின்றாயே..!
கழிவிறக்கும் பூண்டென்னை..
கட்டி அனைத்தாயே...!

கொஞ்சி மொழி பேசியென்னில்..
கொவ்வை சிரிப்பை விளைத்தாயே..!
அஞ்சி அரவணைத்தென்னை..
பாசமழை பொழிந்தாயே..!

ஓடி விளையாட வைத்தென்னை..
ஓரக்கண்ணால் மகிழ்ந்தாயே..!
ஆடி பாடி ஆர்ப்பரித்தென்னை..
ஆனந்தம் பூண்டாயே..!

சிலையாக வடித்தென்னை..
சித்திரம் போல் பார்த்தாயே..!
மாலை போட்டென்னை..
மனமுருகி நின்றாயே..!

கண்ணிமை போல் காத்தென்னை..
வளர்த்து வாழ வைத்தாயே..!
மண்ணில் தவழ விட்டென்னை..
மதி மகிழ்ந்து தவிர்த்தாயே..!

என் துயரெல்லாம் நீ..
உன் துயராக்கி வாழ்ந்தாயே..!
உத்தமனாக்கி என்னை..
பார்த்து மகிழ்ந்தாயே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராரோ சொல்லியென்னை..
தூங்க வைப்பாயே..!
வாராயோ..! அன்பை பொழிந்து..
தாலாட்டி தூங்க வைப்பாயே..!

அழுது வீரிட்ட போதெல்லாம்..
அணைத்து ஆசை முத்தம் தருவாயே..!
எழுத வைத்தென்னை..
ஏணியாக நின்றாயே..!

தாயின் பாசத்துக்கு அவனியில்..
ஈடானதொன்றுமில்லை தாயே..!
ஆயில் முழுவதும் உனை நினைத்து..
அருதினமும் துதித்து நின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையோடு வாராயோ

எண்ணங்கள் எழில்பரவ
ஏந்திளையான் உலாவிவர
கண்ணாலே மொழிபேசி
காருண்யம் கரை தவழ
மின்னிலிடை மின்மினிக்க
வானோர் வாழ்ந்துரைக்க
சின்னவளே சிங்கார பெண்ணவளே
சிங்காரமாக சிறப்புடனே வாராயோ!

இன்னிசை ஓசையிலே
இசைவெள்ளம் கரை புரள
பன்னிசை பாடினாலே
பாலையவள் பலிந்துவர
மண்வாசல் மகிழ்ச்சியிலே
மக்கள் வெள்ளம் பாடிவர
என்னவளே எழிலானவளே பெண்ணே
ஏற்றங்காண சிறப்புடனே வாராயோ!

எட்டுத்திக்கும் எழில் மேவ
எண்ணுள்ளம் ஏற்றம்பெற
சிட்டு பைங் கிளியாளின்
சீரிழமை சிறந்தோங்க
வட்டமதி மின்மினிக்க

வானோர் வாழ்த்துரைக்க
பட்ட துயரங்கள் இன்றோ பறந்தோட
பாவையாளே சிறப்புடன் வாராயோ
மகிழ்ச்சி தன்னில் மதிமயங்க
மனமெல்லாம் உவகைகொள்ள
இகழ்ச்சிகள் இன்றோழிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகமெல்லாம் இன்புறவ
புகழ்ச்சிகள் பார் உரைக்க
புவனமெங்கும் அகிலத்தார் புகழ் உரைக்க
ஆரணங்கே சின்னவளே

தங்கு தடைகள் அகற்றிடவே
தாழாழை தகந்திடவே
பங்கமெல்லாம் தொல்லைகள்
பறந்தோடி பார்சிறக்க
கங்குகரை புரண்டதுயர்
காலத்தால் அழிந்திடவே
கரம் தூங்கி காரியங்கள் சிறப்பிக்க
'கர' வருடமே கருணையோடு வாராயோ!

தினகரன் 12.6.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கட்டும் நல்வாழ்

பாரெங்கும் ஒளிவீசும்
பகலவனை
பால் பொங்கவிட்டு
வரவேற்று அவனியில்ஏ
ஆனந்த மெங்கும்
அன்பு மொழிய
அனுதினமும்
பொங்கி மகிழ்வோம்.

நல்வாழ்வு புகழ
காருண்யம் கருணை பெற
பொங்கலிட்டு பூரிப்போம்.

வந்து போகும்
"தை" விலகாமல்
வாழ்த்துக் கூறும் மரபை நீக்கி
எம்வாழ்வு நலம் காண
புதுவாழ்வு பூத்து குலுங்
மெய்படிப்போம்.

உழவனைக் கண்டு
வறுமை போக்கி
கவலை தீர்க்க
தை மகளே வந்து போ.
பாரம்மா எம்மினகுலமகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து எம்துயர் தீரம்மா
பாவப்பட்ட எம்மினத்தின்
பஞ்சம்பசி தீரம்மா
சமாதானம் வந்த
போதும் இன்னமும்
சந்தோஷம் எமக்கில்லையே
தை மகளே உன்வரவால்
நல்வாழ்வு பூக்குமம்மா

2014.01.19 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய ராகம்

எண்ணங்கள் ஊன்றெடுத்த — அந்தி
பொழுது எப்போ வரும்
கண்ணால் பார்த்து ரசித்த
காலம் எப்போ வரும்;
மண்ணாகிப் போன — நம்
பேராசை எப்போ வரும்!
உன்னோடு உறவு — சொன்ன
நாளும் எப்போ வரும்!

முல்லைச் சிரிப்பில் குமிழ்
கன்னம் பார்தேன்.
கல்ல உறவில் - நிதம்
கடைக்கண் பார்த்தேன்!
எல்லை இல்லா — உறவில்
ஏழ்மை யான் பார்த்தேன்
நல்ல நாள் - பார்த்து
நாமும் எப்போ இணைவோம்

உறவுகள் பிரிந்தால் - எம்
உணர்வுகள் இல்லாபோகும்;
கனவுகள் கலைந்து — விட்டால்
காரியங்கள் எப்போது முடியும்
நவிவாகி விட்ட — நாளின்
நன்மை எப்போ வரும்
மனம் போன — வாழ்வில்
விடிவு தான் எப்போ வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன நாள் போகட்டும் -
வரும்
நாளில் மகிழ்வு பெறுவோம்
கான நீரான ஏக்கம் - எம்மை
எப்போ விட்டகழும்
மண நாளை நினைத்து — நாம்
மகிழ்வதும் எப்போ!

அன்று சொன்ன
ஆசை வார்த்தை காற்றானது
இன்று உன் பார்வை
கனலாக வீசுது
என்றும் உன் மேல் வைத்த
பாசம் பாகாக வுருகுது
நன்றே வாழ - வாழ்ந்த
யாருமில்லா பாவி நாம்

காதல் பருவம் - என்றும்
காலத்தால் அழியாது
மாதம் சென்றாலும் நாம்
மகிழ்வோம் வாழ்வில்
நேசம் கொண்டு — நாம்
இணைவோம் இனிய நாளில்.

தினகரன்- 2012.12.21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த எந்த நாள்.

முந்தான சேலைக்காரி
முத்தமிழும் அனைந்தவளே
கத்தாக உனை மணக்கி
அந்நாளை நீயே சொல்லு!

காதல் மொழிபேசி
கன்னிகாதாரம் பூனைய
சாதனை புரிய
அந்நாளை நீயே சொல்லு

ஒன்றாக நாம் வாழ
ஈரிடலும் ஓரிடலாக
ஒற்றுமை காணவே
அந்நாளை நீயே சொல்லு!

மணவறை கோலத்தில்
மணாளனாக நான்மாற
என்னவளே இனியவளே
அந்நாள் எந்நாள் சொல்லு

தினக்கரன் இதழ் - 2014.01.07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிந்த மனம்

நாம் இணைந்த நாள்
நாளானாலும் மறையாது
காவு கொண்ட கனவு
காலத்தை வெல்லாது!

அன்றே அணைத்த நாள்
இன்று போல் இருக்கிறது
காலம் கடந்தாலும்
கண்ணீராக மலர்கின்றது!

கண்ணூர் படாத நாள்
காலத்தால் அழியாது
மண்ணோடு மறைந்தாலும்
மாறாது நம் உறவடி!

தொட்டு அணைத்த
தெவிட்டா ஸ்பரிசம்
கட்டி இணைந்தும்
கானல் நீரானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழி பதுங்கி நின்றேன்
மொழி புரியா தவித்தேன்
கழிவிரக்கம் கொண்டேன்
பாவியாகித் தவித்தேன்!

கன்னிகாதாரம் கொண்டாய்
காலத்தை வென்றாய்
எண்ணமெல்லாம் உன்னிடத்தில்
எட்டாக் கனியாகி நின்றாய்!

நினைத்தேன் நின்னடியை
தவிர்த்தேன் தாழாத் துயரில்
அணைத்தேன் தாயன்பை
உணர்ந்தேன் மனதுயரை!

பாவப்பட்ட பாவியாக
பரிதாபம் கொண்டேனடி
ஏகப்பட்ட ஏக்கத்துடன்
கனிந்த மனமாகினேன்!

தென்றல் - 2015, ஐப்பசி, மார்கழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுமையில் ஒற்றுமை காண்பான்

மக்களை ஏமாற்றும் அரசியலுக்கா
மாயமாய் உழைக்கின்றான்
ஏக்கம் நிறைந்த ஆசையில்
படாதுபடுகின்றான்

கொண்ட கொள்கை இல்லாது
பச்சோந்தியாக வாழ்கின்றான்
உண்ட வீட்டுக்கு இரண்டகச்
செயலால் தெருவில் நிற்கின்றான்

தீய செயலில் கொடுமையால்
கெட்டழிந்து நிற்கின்றான்
உயர்வைத் தேடி உத்தமனாக
வாழப்பாடுபடுகின்றான்

போட்டி பொறாமை எண்ணத்தால்
தன்னை அழிக்கின்றான்
தட்டிக் கேட்க ஆள் இல்லாததினால்
தன்னால் மாய்கின்றான்

காதல் வயப்பட்டு நின்றதினால்
தாயை வெறுக்கின்றான்
சாதனை என யெண்ணிமன
வேதனை கொள்கின்றான்

மக்கள் சேவகனாக நடித்து
பணமோசடி பண்ணுகின்றான்
தக்க சமயத்தில் செய்யும் தர்மத்தால்
சான்றோர் ஆகிவிட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி சண்டை ஒழிந்திங்கு
சமாதானம் மலரவைப்பான்
நாதி இன்றி காணும் நம்மவரை
நானிலம் போற்ற வைப்பான்

நாட்டுப்பற்றுடன் நாம் வாழ
நாளும் பாடுபடுவான்
காட்டுத் தீயைப் போல பரவும்
வதந்தி ஒழித்திட முன் நிற்பான்

துன்ப துயரங்கள் கொண்ட வாழ்வை
துரத்தி அடித்திடுவான்
பங்க மின்றிக் காணும் பாவையர்களை
கண்டு கழியிறக்கமுறுவான்

உழைப்பே உயர்வென எண்ணி
உறுதி கொண்டுழைப்பான்
பழைய பல்லவியைச் சொல்லும்
கூட்டத்தாரை வேரறுத்திடுவான்

இன பேதமில்லா சமுதாயத்தை
காணத் துடித்திடுவான்
கனம் பண்ணும் காளையரை
கண்டு கண்ணியமாவான்

போதிமாதவன் தந்த போதனையை
சாதனையாகப் போற்றுவான்
பாதியில் வந்த வேதனையால்
ஒற்றுமை காணத்துடிப்பான்.

தாயக ஒலி – 2019 ஜீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவென்பது

அம்மா என்ற
அமுத மொழியை
கரம்பிடித்தவள்
ஊட்டிய இன்பம் போல

பாடசாலை செல்ல
முடியாமல் தவித்த நிலையில்
பாதை காட்டிய
நல்லாசிரியனைப் போல

படித்துப் பட்டம் பெற்று
வேலையின்றி நின்ற போது
உத்தியோகம்
கிடைத்தது போல

தாயைப் பிரிந்து
தத்தளித்து நின்ற போது
தாரம் கிடைத்தது போல
பரீட்சையில் சித்தியின்றி
வேதனையில் நின்ற வேளை
சித்தியடைந்த தகவல்
கிடைத்தது போல

வெயில் கொடுமையில்
நடக்கும் போது
நிழல் கிடைத்தால் போல

பட்ட கடனை தீர்க்காமல்
பரிதவித்த நிலையில்
பணம் தந்துதவிய
நண்பனைப் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் வயப்பட்டு
கன்னிகாதாரம் பூண்டு
இன்ப சுகம் காணும் வேலை
காதலி கைவிட்டது போல

பிள்ளை பாக்கியம்
இல்லையென
நினைத்திருந்த போது
டியூப் பிள்ளை

கிடைத்தது போல
உறவு கொண்டானடி - கிளியே
உணர்வுகள் ஊற்றாக
வந்து நின்ற போது

வீரகேசரி
2016.01.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பே உயர்வு

உழைப்பு
போராட்டமல்ல - அது
நெற்றி வியர்வையை விதைத்து
கனவுகள் செய்யும் அறுவடை

உழைப்பே
உயர்வின் பாதைக்கு
ஒரே வழிகாட்டி
நாளைய கனவை
நல்ல நாளய்க் காணும்
உன்னத வெற்றியின்
ஊன்றுகோளும் இதுவே

வலிகள் கலந்த
உழைப்பு ஒருபோதும்
தொலைவதில்லை
ஏன்? வீரதலைவன்
நெப்போலியனும்
விறகு வெட்டும்
தொழிலாளியும்
உழைப்பாளிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியில் உழன்று
சாதனை புரிந்த
ஆபிரகாம் லிங்கன் கூட
செருப்புத் தைக்கும்
தொழிலாளியின்
தனயனே !

இளைஞனே
இன்றைய கனவுகளின்
நாளைய கதாநாயகனே
உழத்தெழு
உன்னால் முடியும்

இன்றைய எண்ணம்
நாளை நிறைவுபெரும் நீ
உன் உடலை உருக்கி
உழைக்கும் கனவுக்கு
உயிர்கொடுத்துவிட்டால் !

வீரகேசரி

2016.06.26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ் வென் பது

கருவறையில் ஊற்றாகி
மண்ணில் மழலைச்
செல்வமாக தவழ்ந்தபோது
அரவணைத்து உச்சிமோந்த
அன்னையின் ஆசைமுத்தம் போல..!

நோய் நொடியின்றி
பாராட்டி சீராட்டி
கண்மணியானப் பாதுகாத்து
பக்குவமாக வளர்த்து
பால் தந்த தாயை போல..!

பள்ளி செல்ல எனக்கு
நல் பாதையும் காட்டி
படிக்க வேண்டிய
திசையும் சொன்ன
என் பெற்றோரைப் போல..!

இரவு பகலாக கண்விழித்து
பரீட்சையில் சித்தியெய்து
ஓடோடி வந்தென்னை
ஆலிங்கம் செய்து..
பாராட்டி.. நேயம் கொண்ட
நல்லாசிரியரைப் போல..!

தோழிலின்றி வேலை
வாய்ப்பை தேடி
தவித்த காலத்தில்
தொண்டனாக வந்து
வாழ்வளித்த உளவு பூத்த
உற்ற நண்பனைப் போல..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுமனம் பூத்த காதலன் பின்
ஒருமனம் பூண்ட அவனின்
நயவஞ்சக
காழ்ப்புணர்வு செயலால்
மகம் வாடி போன
தவிப்பைப் போல..!

திசையறியா காலத்தில்
திக்கற்று நின்றதில்.. நல்ல
திசையும் காட்டித் தந்து
முகவரி இல்லா காலத்தில்
நல்ல முகவரியையும் தேடித்தந்த
தாயின் வழிகாட்டி போல..!

ஈன்ற பொழுதில்
பெறா போரின்பத்தை-
சான்றோன் எனக்கேட்டு
பெருமையடைந்த
சுற்றத்தாரின் உறவைப் போல..!

வாழ்க்கையில் வந்து
போகும் துன்பங்களை
கண்டு சோர்வு பெறா
நல்லவரின் மனதைப் போல..!

வீரகேசரி
2019.02.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி மகிழ்வாய் பாலா

பாரில் இருள் அகற்றி
கர்த்தராம் ஜேசுபாலன் உதித்தார்
பாரில் துயரங்கள் களையவே
ஜேசு பிறந்தாரே தரணி சிறக்க!

மார்கழி மாதம் தன்னில்
மாண்புறும் பிறப்பைக்கூறும்
மாட்டுத் தொட்டிலில் அவதரித்தார்
தேவன் மைந்தன் ஜேசுபாலன்

அல்லற்பட்டு
அவதியுறும் மாந்தர்களை
ஆதரித்து ஆறுதல் பகரவே
எல்லேயில்லா
அருள்மழை பொழியவே
அன்பின் அவதாரமாக
ஜேசுவந்தார்!

ஜேசுபாலகனின் வருகையால்
அகிலமே ஆர்ப்பரித்து
அவர்தாழ் என்னும் நந்நாளில்
நானிலம் போற்றிட
மகிழ்ந்திடுவோம்!

கன்னி மரியாளின்
கருவறையில் உதித்த
ஜேசுபாலகனே! எம்மை காத்தருளும்
மண்ணில் மாந்தர் படும்
துயரத்தை
இன்றே ஒழித்திடுவீர்
ஜேசுகுமாரா!

இனங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை அழித்தொழித்து
இல்லங்கள் எங்கும்
நல்லறமாக வேண்டி
சனங்கள் படும்
துயரத்தை களைய
பால மைந்தன் ஜேசு வந்தார்!

மரியன்னையின்
மகனே தேவமைந்தா
மாட்சிமை தந்து மகிழ்வாய் தேவா
உரிமை கொண்ட
மக்களாக — எமக்கு
வழிகாட்டி தருவாய்
ஜேசுபாலா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமை புரிந்த சுனாமி

காலைக் கதிரவன்
கண்விழிக்கும் முன்னே
மாயமாக வந்தெம்மை
மரணத்தை தந்த
மா கடலே..........
ஏன்...?
எமக்கு...?
வேதனை தந்துவிட்டாய்
உன்னை மதித்ததாலெல்லாம்
இன்று
மண்ணோடு மண்ணாகி விட்டதே...

நித்திரை கொண்டெழும் முன்னே...
நிம்மதியை கலைத்த கடலே...
நிர்க்கதியாக்கியதும் நீயே?
அடுக்கடுக்கா கொன்று
அட்டூழியம் புரிந்து
ஒரு நொடிக்குள்ளே
சுனாமியாக வந்து அப்பாவிகளை கொலை
செய்த
கடலல்லவா... நீ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துறங்கிய தாயையும்
பால் குடித்த பாலகனையும்
பலி கொண்ட
பாவியல்லவா...நீ...
அராஜகம் புரிந்த
அலைகளே
ஆர்ப்பரிந்து வந்து
அப்பாவி உயிர்களை
ஆட்டிப் படைத்த
சுனாமியே...
உன்னை நினைக்கவே
உள்ளமெல்லாம்
கண்ணீர் சிந்துகிறேன்

அப்போது நீ விளைத்த
கொடுமைகள்...சோதனைகள்
நினைத்தாலே...
கடலே... இப்போதும்
உள்ளம்
உருகுகின்றது...

கொஞ்சி குலாவி...
ஆலிங்கனம் புரிந்து
மணம் வீடு கட்டி
மகிழ்ந்த அந்த நாள்
போய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்காது என் மனசு

நல்லவனாக நடிப்பதினால்
வல்லவனாக வர முடியாது — பணம்
இல்லாதவனை பார்த்து விட்டால்
ஏற்காது என் மனசு!

ஏழ்மையை வெறுப்பதினால்
ஏற்றம் காண முடியாது — நிலை
கெட்ட மாந்தரை நினைந்து
தவிக்கிறது என் மனசு!

நிலையற்ற எம் வாழ்வானது
நிம்மதியை பெற முடியாது — நாம்
கவலையற்று கண்ணீர் சிந்தும் போது
பரிதவிக்கின்றது என் மனசு!

சொற் கேட்டு நாடா பிள்ளை
சொந்தங்களுடன் வாழ முடியாது — நிலை
தரி கெட்டு வாழும் உறவுகளை
நடாது என் மனசு!

ஆனசக்கும் அலையும் ஆகுதிகளால்
ஆனந்தம் அடைய முடியாது — காசை
இரைத்து காரியம் பெற
இடம் கொடுக்காது என் மனசு!

சாதனை படைத்த காளையினால்
வேதனை படைக்க முடியாது — போல
போதனை புகட்டும் புரவலர்களை
வெறுக்கிறது என் மனசு!
காலம் கெட்ட காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை நடக்க முடியாது — பறை
மேளம் கொட்டி பகட்டை காண
வெதும்பி நிற்கும் என் மனசு!

காதலால் இணைந்த உள்ளங்களால்
சாதனையாக வாழ முடியாது! — வாழ்வில்
போலி வேசம் போடும் உறவால்
நிம்மதி பெறாது என் மனசு!

பணம் படைத்து பகட்டுடன் வாழ
பந்தாந்தங்களுடன் இணைய முடியாது
மானம் கெட்டு மதிப்பிழக்கும் போது — நாம்
மதிக்காது என் மனசு!

சகோதர வாஞ்சை உறவுகளால்
நேசம் மலர முடியாது — கோவில்
அகோரா சொல்லி ஏமாற்றும்
அடியான்ற வெறுக்கும் என் மனசு!

மானம் கெட்டு மதிப்பிழந்த பின்
மகிழ்ச்சி பெற முடியாது
தானம் கொடாத தனவந்தனை
ஒரு நாளும் ஏற்காது எம் மனசு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாள் உறவு தந்தாள்

உள்ளம் கனிந்த விளம்பி வருடமே - உன்
விருப்புடனே வரவேற்றி நிற்க
கலைந்த கனவுகள் இன்றே
நனவாக பூரிக்க
மலர்ந்த புதுவருடத்தை
மகிழ்வோடு வரவேற்றுஸ
புலர்ந்த பூரிப்பில் புன்னகை
இதழாக மலர்ந்திடு

கதிரவன் உதிக்கும் முன்னே
நித்திரை விட்டெழுந்து
இல்லம் சிறப்பேக
பெற்றோர் சுகம் மகிழ
எத்திசையும் புகழ் ஓங்கிட
சித்திரை வந்தாளடி
சிந்தை மகிழ்ந்தோமடி

கடந்த கால பகை
இன்றே ஒழிந்திட நடந்து போன
வடுக்கள் மறையவே
நிகழ்ந்திட்ட துன்பங்கள் ஒழியவே
மறைந்து போன இன
உறவுகள் மேன்மை பெற
சித்திரை வந்தாளென
சந்தோஷம் கொள்ளுவமடி
சண்டைகள் ஒழிந்தன
சதோஷம் மலர்ந்தன
பண்டை சிறப்புக்கள்
ஈரின மக்களும்
ஓரினமாக வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுபட்டுழைத்து
ஒற்றுமை கீதம் மீட்ட
இன்றே பிறந்தாளே
சித்திரைப் பெண்ணவள்

மாரி மழை பொழிந்திட
காரிருள் கலைந்திட
மக்கள் மனம் கனிந்திட
உற்றவர் போற்றிட உண்மை மலர்ந்திட
ஈரினம் ஒன்றுபட
சந்தோசங்கள் ஒழிந்திட
சமதர்மம் பூத்திட
காலைக் கதிரவன் கருணை தந்திட
சித்திரை வந்தாள் சிறப்புக்கள் தந்தாள்.

மித்திரன் வாரமலர்
2018.04.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஓடிப் போய்விடு...!

கவலைகள் விளைத்த ஆண்டினைப் போல்
கண்ணீரைத் தந்தாண்டல்லவா — நீயும்!
பாவியாக வந்த இரண்டாயிரத்து பதினெட்டே!
எந்த ஜென்மத்திலும்
இந்த மண்ணில் - நீ
வந்து பிறக்காதே...!
நல்லிணக்கத்தை தருவாய் - என
நான் தோறும் நம்பி
வாழ்ந்தோம்...! எம்மை
கண்ணீரைத் தந்து விட்டாய்!

ஊரை விட்டு ஓடிப் போனமைக்கு
மீள் குடியேற்றம் இன்னும் தாமதமே
கரை படிந்த காவல் அரங்குகளினால்
கால தாமதமாகிறது எம் குடியேற்றம்...!
காணாமல் போன உடன்பிறப்பை
கண்ணுக்கு பிடிக்காமையினால்
கண்ணீர் சிந்தி
கவலை கொண்டு நின்கின்றாய்...!
ஒற்றுமை தருவாய் - என
ஓங்கி ஒளித்த
ஆண்டல்லவா — நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டாற்றில் விட்டு — எம்மினத்தை
நடுத் தெருவில் விட்டாய் - நீ
இன்னும் தீராத
துயர் துயரங்கள்
கண்ணீர் விட்டழுதோம்
கவலை தந்தாண்டல்லவா — நீ
இன்றே ஓடிப் போய் விடு
இன்பத்தை தருவாய் என
இன்முக மலர இரண்டாயிரத்து
பத்தொன்பதாமாண்டே இனிதே
வரவேற்று வாழ்துரைத்து
நிற்கின்றோம்...!
வந்து போகும் ஆண்டுகளைப்
போல் இல்லாமல்
வசந்தத்தை தரும்

ஆண்டாக மலர்ந்திடுவாய்...!
பூத்துக் குழுங்கும் புத்தாண்டே..!
புவனம் படைக்க வந்திடுவாய்...!
மாற்றத்ததை தந்து
வசந்தத்தை பூத்திடுவாய்
சக வாழ்வு மலர்ந்து
சந்தோஷம் பிறந்து
சமாதானம் தழைத் தோங்கி
மலரும் புத்தாண்டில்
நல்லாட்சியில் நல்லெண்ணம்
ஓங்கி ஒளத்து
இன ஒற்றுமை வித்திட
புது ஆண்டே! புத்தாண்டே
கவனம் தழைக்க ஓடிவா — நீ இன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை என்னாச்சி

காலம் கெட்டுப் போயாச்சி — நாம்
கவலைப்பட வேண்டியாச்சி
பாவப்பட்ட பாவியாக — ஞாலம்
பரந்து திரிய வேண்டியாச்சி.

அண்ணன் தம்பி உறவுகள் - குடும்ப
சொத்தால் அழிந்து போயாச்சி சாதி
சண்டை யாலே பகை — உலகத்தை
ஆட்டி படைச்சலாச்சி.

பெற்றோரை மதித்து போற்றி — அந்த
உயர்ந்த காலம் என்னாச்சி
கற்றோரை சான்றோன் எனதுதித்த
அந்தக் காலம் மலையேறியாச்சி.

ஒன்றுபட்டு உழைத்த சேகரித்த — குடும்ப
சொத்தெல்லாம் வீணாச்சி
போட்டி பொறாமை கொண்ட உறவால்
வந்த வினையாச்சி.

பாட்டு பாடி பணம் சம்பாதித்த
பண்பட்ட காலம் முடிவாச்சி
உண்டு உறவாடி உறவுகொண்ட
உன்னத காலமும் என்னாச்சி.

கடிதம் எழுதி காதல் புரிந்த - இளமை
கனிந்த காலம் என்னாச்சி
படித்த பாடங்கள் சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்க பண்பு என்னாச்சி.

பெற்றோர் சொன்னதை தட்டாமல்
கரம்பிடித்த காலம் மண்ணாச்சி
எஸ்.எம்.எஸ். பண்ணி இல்லறம் புகும்
இந்தக் காலம் வந்தாச்சி.

சீதனக் கொடுமையினால் - குடும்பங்கள்
சீரழிந்த நாளும் போயாச்சி
உழைப்பு மூலம் உயர்வடைந்த
நல்ல உள்ளங்களும் வந்தாச்சி.

நாமிருவர் நமக்கிருவர் என்றிராது —
நல்ல குடும்பமாய் வாழ்ந்திடுவாய் - தமிழா
நாளும் பொழுதும் நலமாக வாழ
என்றும் போற்றி மகிழ்வாச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மே" தினம்

உரிமை குரல் எழுப்பி
ஒற்றுமையே அடிநாதமாக்கி
ஒன்றுபட்ட தொழிலாளர் இனம்
கொண்டாடும் தினமே
"மே" தினம்

பாடுபட்டு உழைத்த
பாட்டாளி வர்க்கம்
பாரெல்லாம் பெற்று
முரசு கொட்டும்
உன்னத தொழிலாளர் தினமே
"மே" தினம்

அடிமைப்பட்ட உயர்வாக உழைத்து
ஓய்வின்றி தவித்த வர்க்கம்
எட்டுமணி நேரமாக்கி
போராட்ட வடிவின்
பெருமை தந்த நாளே
"மே" தினம்

ஒன்றுபட்ட தொழிலாளர்
ஓரணியில் அணி திரண்டு
ஒன்றுபட்டு கொண்டாடும்
ஒற்றுமை தினமே
"மே" தினம்

நவமணி : 2004.05.02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை தீபம் ஏற்ற வாரீர்

துயரங்கள் இன்றே பறந்திடவும்
தூய வாழ்வு இம்மிடமலரவும்
காயங்கள் எம்மை விட்டகலவும்
காருண்யம் எங்கும் ஓங்கவும்
பாவங்கள் பட்ட துன்பங்கள் அழிந்திடவும்
பாச வலைகள் பரிணத்தோடவும்
நயமுடன் நம் வாழ்வு வளம்பெற
தீபாவளியும் வந்ததோ!

நாளைய பொழுது நலமேக
நாமும் மகிழ்ந்து கொண்டாடவும்
ஏழை எளியவர் ஏற்றம் காண
என்றும் தொழுதி வாழ்ந்திடவும்
பழையன கழிந்து புதியன மலர
புன்னகை கொண்ட புவனம் சிறக்க
கொடியவனாம் நரகாசுரனை வதைத்த
புனித நாளே தீபநாள்

சீரான பாதை வகுத்த நாம்
சிறப்புடனே தீபத்தை ஏற்றிடவும்
பாரெல்லாம் மத்தாப்பு ஒளியேற்றி
பரமனை பாடி பணிந்து போற்றி
நாளெல்லாம் நம் வாழ்வு ஒளிபெற
நாமும் துதிப்போம் அவன் நாமம்
ஊரெல்லாம் ஒன்றுகூடி
ஒற்றுமை தீபத்தை ஏற்ற வாரீர்!

2013.11.02 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017

குதுகலமாய் கொண்டாடி வரவேற்று
பட்டாசு கொளுத்தி மகிழ்ந்து
வையம் சிறக்க வாழ்த்தொலி எழுப்பி
வாழ்த்து கூறிய எமக்கு
என்றும் காணாத் துயரையும்
இன்னலையும் தந்த இரண்டாயிரத்து
பதினாறே
உன்னைப் போல ஓர் ஆண்டு
இனி வரவே வேண்டாம்!!

நீமண்ணில் மலர்ந்த போது
மட்டிலா மகிழ்ச்சி பெற்றோம்
கண்ணீரைத் தருவாய் என
கனவிலும் நினைக்கவில்லை
கொடுமை புரிந்தாய்
கொண்டாடியவனை
தொலைத்தாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைத் தீபாவளி

எல்லாத் தீபாவளியும் - வந்து
போன தீபாவளியைப் போல்
இல்லாமல் நீ
மாற்றத்தின் ஏற்றத்தைக்
காணும் மகிழ்வான
தீபாவளியை வரவேற்போம்
துயரங்களை துடைப்பாய்
துன்பங்களை களைவாய்
அநியாயத்தை ஒழிப்பாய்
அராஜகத்தை அறுப்பாய்
என்று சொல்லும்
தித்திக்கும் தீபாவளியை
வரவேற்று மகிழ்வோம்
சந்தோசம் காண்போம்
சமாதானத்தை பேணுவோம்
நல் உறவு திளைப்போம் என
நானிலம் போற்றும்
உண்மைத் திருநாளாம்
தீபாவளியை கொண்டாடுவோம்..

2012.11.13
வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபங்கள் ஒளிர்ந்தன

துன்பம் ஓய்ந்தன துயரங்கள் மறைந்தன
இன்பம் பிறந்தன இனிமை தவழ்ந்தன
அன்பு மலர்ந்தன ஆனவம் களைந்தன
நம்பிக்கை வந்தன நன்மை நவின்றன
கவலை அழிந்தன காரியங்கள் பெற்றன
வன்முறை ஒழிந்தன வாழ்த்துக்கள் பறந்தன
கண்டம் ஓய்ந்தன காருண்யம் சிறந்தன
மகிழ்வு தந்த தீப நாளென போற்றுவோம்
தித்திக்கும் நாளில் தீமைகள் ஒழிந்தன
திக்கட்டும் மனங்கள் அன்பு ஒழி பெற்றன
ஏங்கிய உள்ளங்கள் ஏற்றம் கண்டன
மங்கிய ஒளி ஓங்கி ஒளித்தன
சிந்திய எண்ணங்கள் சீறிப் பாய்ந்தன
சத்திய வாக்குகள் சாதனை ஆகின
வந்த துயரங்கள் மண்ணில் மடிந்தன
நலமுடன் வாழ தீபங்கள் ஒளித்தன
ஆணவம் அழிந்தன ஆனந்தம் குடிகொண்டன
பாவங்கள் இல்லாமை பந்தங்கள் உறவாகின
எண்ணங்கள் உயர்ந்தன ஏற்றங்கள் எழுந்தன
எல்லாம் வந்ததினால் ஏழ்மை அழிந்தன
கண்டனங்கள் பறந்தன நன்மை நாடின
கர்வம் தொலைந்தன கடமை கவர்ந்தன
ஒற்றுமை ஓங்கின தொல்லை இல்லாதாகின
சந்தோஷ நாளன்று தீபம் ஒளிர்ந்தன.

2011.10.05
வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதுவை நல வாழ்த்துப்பா

(2010.08.27 நாளன்று நிகழ்வுற்று கன்னிகாதார நிகழ்வன்று அன்புள்ளம் கொண்ட நெஞ்சம் மனமொன்றி உவந்தளித்த வாழ்த்து பாமாலை இ∴து)

திருவளரும் செல்வ நம்பி ரகுகாந்த்
திருவளரும் செல்வ நங்கை ஜனனி
இருமனம் கலந்தின்ப இல்லறம் புகும்போது
தீருமண விழவுகண்டு வடித்திட்ட வாழ்த்து.

காப்பு நலம் வாழி. வென்பா
நேர்மையோடு நல்லாற்றல் நேயத்து யாமுற்ற
சீர்மையோடு பண்பெனும் சிறப்பு - சேர்ந்து
சிந்தனையிற் சேர்ந்திருக்கும் சிவமயத்து
வல்லானை
எந்தையென தொழுகிறோம் என்று.

தலைவா நலம் வாழி. விருத்தங்கள்.
நீலக் கடல் கரை தனிலே - நித்திலம் ஓங்கி
அலைபாயும்
நிகரில்லா நின்புகழ் மேவும் - நினைமீட்டும்
நீர்கொழும்பு நன்நகரில்
முத்தென முதிர்ந்து முரசம்போல்வந்துதித்த
முருகனின் மகனே ! இளையவனே !
கன்னித் தமிழ் வடித்த கங்காவின் மகனே !!
ரகுவே வாழி !
ஒப்பாறும் மிக்காறுமின்றி நயமுடன்
சங்கமிப்பான் நண்பனிடம்
திக்கெட்டும் தீன் தமிழை சுவைபடவே
வடித்திடுவான்
சிங்கார சிரிப்பினிலே காதல் கொண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனியிடம்
தூங்க நிலை உயிர் புடையான் தூய கற்பில்
வதுவை கண்டான்
துணைவா நீ வாழி !

தலைவி நலம் வாழி.
நல்ல மனம் கொண்ட நவரத்தினம் ஐயன் -
நாடோறும் போற்றிட நலமுடன்
வாழ்ந்தமைந்தன்
பங்கமில்லா பரிமள ஜெந்தியோடு பாசமுடன்
வாழ்ந்திட்ட தங்கமென ஈன்ற ஜனனி நியே
அழகோடுவாழ
ரசிக்கின்ற நாயகனாம் ரகுகாந்தை
கரம்பிடித்து இல்லறத்தில் நல்லறம்
காண்பவளே இங்கிதமா வாழி !
முத்துச்சிரிப்பழகி முத்தமிழின் பேச்சழகி கன்னித்
தமிழ் காவழகி காக்கும் தமிழ் கற்பரசி
சின்ன நடைபயின்று சிங்காரமாய்
மையல்கொண்டு வண்ண மொழி பேசி
வதனத்தால் கண் சிமிட்டி
இன்பரச காதலியே கனிவுற்று வாழ்ந்திடு!

மண நலம் வாழ்க.
காத லெனும் இருமணத்தில்
கன்னிகாதாரம் பூண்டு
ஆதரவு பட்டதென
ஆன்றோர் முரசொலிக்க
மனைவி அமைதெல்லாம்
இறைவன் கொடுத்த வரமாம்
சிற்றின்ப ஊடலிலே
பத்தும் பெற்று பிள்ளைச்செல்வத்துடன்
பாங்குடனே வாழ்கவே வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான தீபம் ஏற்றிடுவோம்

வரிசையாக தீபங்கள் ஏற்றிட
வந்ததம்மா மகிழ்வான தீபாவளி
உரிமை கொண்டாட எம்மவர்க்கு
உயர்ந்த திருநாளம்மா!

ஒளியேற்றும் மகிழ்வான நாளன்று
ஒற்றுமை உணர்வு வேண்டுமம்மா
பலிவாங்கும் செயல் இன்றே ஒழிந்திட
பாங்கான திருநாளொன்று வந்ததம்மா!

அமைதி பிறந்து ஆனந்தம் தந்திட
அணையாத தீபஒளி பிறந்ததம்மா
கொடுமை அகன்று கோட்டம் அகல
கொண்டாடுவோம் தீப நாளம்மா!

நாசம் புரிந்த நரகாசூரனை வதைத்த
நாளென்று சொல்லி மகிழ்ந்திடம்மா
தேசம் எங்கும் சிறப்புடன் ஒளியேற்றும்
தெய்வீக திருநாளம்மா!

சாந்தி சமாதானம் பிறந்திட
அமர தீபத்தை ஏற்றிடுவோம்
ஓங்கி ஒளிதரும் ஒற்றுமை தீபத்தை
ஒன்றாக ஏற்றி மகிழ்ந்திடுவோம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றி மகிழும் தீபநாள்

தீபத்திருநாளே நீவா - என்றும் போல்
தீராத மகிழ்வுகளை கொண்டுவா!
துன்பத்தை ஒழித்த நன் நாளே வா
துயரங்களை இன்றே போக்கிட வா
இன்பத்தை மண்ணில் விளைத்திட வா
அன்பை அவனியில் பரப்பிட வா
ஆசைகளை இன்றே முடித்திட வா
பந்த பாசங்களை இணைத்திட வா
பார் போற்ற தீபத்தை ஏற்றிட வா

தீபத்திருநாளே நீவா - என்றும்போல்
தீராத மகிழ்வுகளை கொண்டுவா!
தீமைகளை தீண்டிடும் நாளல்லவா
சிறப்புக்களை தந்த பெருநாளல்லவா
பாவங்களை அழிக்க வந்திடுவாய்
பாவிகளை இல்லாதொழித்திடுவாய்
அதர்மத்தை மண்ணில் அகற்றிடுவாய்
தர்மத்தை பரப்ப முனைந்திடுவாய்
வேதனை போக்கிட மலர்ந்திடுவாய்

தீபத்திருநாளே நீவா - என்றும் போல்
தீராத மகிழ்வுகளை கொண்டுவா!
ஆனந்த தீபத்தை ஏற்றிடுவாய்
அகந்தையை இன்றே அணைத்திடுவாய்
சமாதானத்தை இன்றே தந்திடுவாய்
சந்தோசம் பிறக்க வந்திடுவாய்
இன பேதத்தை அழித்திடுவாய்
இனங்களிடத்தில் ஒற்றுமை தந்திடுவாய்
அணையா தீபங்கள் அவனியில் ஏற்றிடுவாய்
எல்லோரும் போற்றும் தீபமாக வந்திடுவாய்

2006.10.22 நவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபங்கள் ஏற்றுவோம்...!

ஒளி பிறந்த இன்ப நாளடா..!
ஒவ்வொரு இல்லங்களிலும் திருநாளடா..!
களிதந்து காரியங்கள் பெருக்கிய நாளடா..!
காத்தருள வந்த திருநாளடா..!

வரிசையாக தீபங்கள் ஏற்றிடடா..!
வந்த தொல்லைகளை இன்றே ஒழித்திடடா..!
உரிமைகளை தரும் இன்ப நாளடா..!
உயர்ந்தோர் போற்றும் திருநாளடா..!

பாடிப்பணிந்து தீமைகளை ஒளித்திடடா..!
படியேறி பார்போற்ற தீபங்களை ஏற்றிடடா..!
மாடிமனை குடிசைகள் எங்கும் பொங்கிடடா..!
மகிழ்வான தீபங்களை ஏற்றிடடா..!

நரகாசுரன்தனை வதைத்த திருநாளடா..!
கொடியோனின் கொள்கையை சிதைத்த நாளடா..!
தீராத தொல்லைகள் இன்றே தீர்ந்ததடா..!
தித்திக்கும் தேனாக வந்த திருநாளடா..!

தர்மம் தழைத்து அதர்மத்தை அழித்திட்ட நாளடா..!
மர்மங்கள் மாண்டு மக்களை வாழ்வித்த நாளடா..!
கர்ம வினைகள் இன்றே போகிவிட்டதடா..!
காருண்யம் மலர்ந்த திருநாளடா..!

போர்ஓய்ந்து சமாதானம் தந்த நாளடா..!
அமைதியை தந்து எம்மைக் காத்த நாளடா..!
பார்போற்றி பரமனை துதித்திடடா..!
வர்ண தீபங்களை வானெங்கும் ஏற்றிடடா..!

2012.11.15 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கட்டும் நல் வாழ்வு!!

பாரெங்கும் ஒளிவீசும்
பகலவனை
பால் பொங்கவிட்டு
வரவேற்று அவனியில்
ஆனந்த மெங்கும்
அன்பு மொழிய
அனுதினமும்
பொங்கி மகிழ்வோம்.

நல்வாழ்வு மலரவே
நற் கருமங்கள் ஓங்கிட
நூணிலம் போற்றி நலமுடன் வாழவே
சான்றோர் புழக
காருண்யம் கருணை பெற
பொங்கலிட்டு பூரிப்போம்.

வந்து போகும்
“தை” விலகாமல்
வாழ்த்துக் கூறும் மரபை நீக்கி
எம்வாழ்வு நலம் காண
புதுவாழ்வு பூத்து குலுங்க
மெய்படிப்போம்.

உழவனைக் கண்டு
வறுமை போக்கி
கவலை தீர்க்க
தை மகளே வந்து போ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்மா எம்மினகுலமகளே
வந்து எம்துயர் தீரம்மா
பாவப்பட்ட எம்மினத்தின்
பஞ்சம்பசி தீரம்மா
சமாதானம் வந்த

போதும் இன்னமும்
சந்தோஷம் எமக்கில்லையே
தை மகளே உன்வரவால்
நல்வாழ்வு பூக்குமம்மா

**2014.01.19**
**வீரசேகரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாள் தைமகள்

மணங்களை மண்ணில்
மகழவைத்து
மகளிர் மனதில் மாண்புரயிட்டு
உறவுகளை உள்ளன்புடன் உயரவைத்து
உத்தம தைமகள்
வந்துதித்தாளே..!

உழுதுண்டு உழைத்த
உழவனவன்
உயர்வோடு அவனில் பவணிவந்தான்
எழில் கண்டு ஏற்றங்கள் செய்திடுவான்
எந்நாளும் உழவனை
போற்றிடுவோம்

செங்கதிராய் விளையும்
நெல்மணியை
தேசமெல்லாம் சிறக்கசெய்திடுவான்
பங்கமில்லா பவணிவரும் பரிதியை
பாங்கோடு உதித்திட்டாள்
தைமகளும்

முக்கனி சிறப்புடன்
முழுமதியாவுலாவர
முத்திரை பதித்து முழுநிலா
வாழ்வுரைக்க
இக்கரை பூர்த்தி இவ்வுலகம் இன்பமுற
அக்கரையோடு வந்துதித்தாள்
தையவள்

## ஓடி வந்தோம் வடம் பிடிக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னவன் பதிக்கு வந்தோம்!
முன் வினை தீர்த்து வைத்தாய்:
எம்மவர் குறைகள் காத்தான்:
நம்பிரான் முன்னை நாதர்:
மன்னவன் போல் வீற்றிருந்து:
மதிப்பில்லா புகழும் கொண்டான்:
எம்வினை தீர்க்க வந்தான்!
வடிவழகியோடு தேரில்:
வந்தோமையா உன் வாசல்:
வடம்பிடிக்க ஓடிவந்தோம்!

துன்ப சாகரத்தில் மக்கள்!
துவண்டு கதறி அழும் காட்சி
என்றும் துயரமப்பா! எம்மக்கள்
படும்பாடு வேதனையப்பா!
திக்கற்ற மக்கள் கூட்டம்
திரண்டு உன்பாதம் பணிந்திடவே!
வந்து துயர் போக்கிட:
வந்தோம் உன் தலம் நாடி:
தேரேரி வரும் முன்னவனே
ஓடி வந்தோம் வடம் பிடிக்க!

ஒப்பாரி சத்தங்கள்!
ஓங்கி ஒலித்திடுமிங்கே:
அப்பாவி மக்களெல்லாம்:
அழுது புலம்பிய காலம் போக
காப்பாய் எம்மினத்தை - என்று!
கதறி ஓடி வந்தோம்:
தேரேரி வரும் முன்னவனே!
வந்தோமப்பா வடம் பிடிக்க:

07.09.2009
வீரகேசரி

வழிகாட்டி
மகிழ்வாய் பாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரில் இருள் அகற்றி
கர்த்தராம் ஜேசுபாலன் உதித்தார்
பாரில் துயரங்கள் களையவே
ஜேசு பிறந்தாரே தரணி சிறக்க!

மார்கழி மாதம் தன்னில்
மாண்புறும் பிறப்பை கூறும்
மாட்டுத் தொட்டிலில் அவதரித்தார்
தேவன் மைந்தன் ஜேசுபாலன்!

அல்லற்பட்டு
அவதியுறும் மாந்தர்களை
ஆதரித்து ஆறுதல் பகரவே
எல்லையில்லா
அருள்மழை பொழியவே
அன்பின் அவதாரமாக
ஜேசு வந்தார்!

ஜேசு பாலகனின் வருகையால்
அகிலமே ஆர்ப்பரித்தது
அவர்தாழ் பணிய
நத்தார் என்னும் நந்நாளில்
நானிலம் போற்றிட
மகிழ்ந்திடுவோம்!

கன்னி மரியாளின்
கருவறையில் உதித்த
ஜேசுபாலகனே! எம்மை காத்தருளும்
மண்ணில் மாந்தர் படும்

துயரத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே ஒழித்திடுவீர்
ஜேசுகுமாரா!

இனங்களின்
வேற்றுமை அழித்தொழித்து
இல்லங்கள் எங்கும்
நல்லறமாக வேண்டி
சனங்கள் படும்
துயரத்தை களைய
பால மைந்தன் ஜேசு வந்தார்!

மரியன்னையின்
மகனே தேவமைந்தா
மாட்சிமை தந்து மகிழ்வாய் தேவா
உரிமை கொண்ட
மக்களாக - எமக்கு
வழிகாட்டி தருவாய்
ஜேசுபாலா!

**24.12.2006**
**நவமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை சூழ் மாத்தளை நகரில்
வளங்கள் பல சூழ்ந்து நிற்க
கலைகள் பல இசை மீட்க
கவிஞர் காட்சிகள் கண்சிமிட்ட
சிலைகளின் அற்புத கோபுரத்தில்
சிங்கார வண்ணமலர் சூடி நிற்க
நிலை கொண்ட கண்ணூர் காட்சிகாண
பண்ணாகம் மாத்தளை வந்து பாரீர்!

பெப்ரவரி மாதம் கொடியேற
தெருவெங்கும் பஞ்சரத தேரோட்டம்
ஆன்மீக சொற்பொழிகள் அருதினம்
அடியார் செவிகளுக்கு தேனாகும்
தெருவீதி எங்கும் திருக்கோலம்
அம்மானின் புகழ் மனக்கோலம்
மாசி மகோற்சவத்தின் மகிழ்மை காண
வந்து ஒருமுறை காண வாரீர்

பண்ணாகம் என்ன பலம் பதியாம்
பக்தர்களின் ஒளிவெள்ளம் எங்குமொலிக்க
எண்ணமெல்லாம் அவளின் புகழ் எடுத்தாம்ப
எட்டுதிக்கும் அடியார் கூட்டம் பாடிநிற்க
வண்ணமலர் சித்திரதேரில் பவனிவர
வந்தவினை தீர்க்கும் அற்புதங்கள் சூடிநிற்க
கண்ணீர் உருகும் அடியார் காட்சிகாண
மாத்தளை வாரீர்! அருள் பெறுவீர்

14.02.2011 வீரகேசரி

# தேரேரி வரும் முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நகரில் குடிகொண்ட நல்லூர் முருகா - உன்
நாமம் எம் நாவில் என்றும் ஒலிக்குதுபார்!
கள்ளமில்லா உள்ளங்களுக்கு காட்சிதந்து
காத்தருள்வாய் என உன்னடியில் ஓடிவந்தோம்!
எல்லையில்லா துயரங்களை இன்றேயொழித்து
எந்நாளும் உன்னிடத்தில் தவமிருந்தோம்!
தொல்லைகள் போக்கி அற்புதம் புரியும்
நல்லூர் முருகன் தேரேரி வந்தான்

வெள்ளம் போல் மக்கள் கூட்டம் வீதி எங்கும்
திரண்டொலிக்கும் திருநாமம் உன்நாமம்!
கதறியழும் காட்சியுடன் கண்ணீர் சிந்த
கண்டவுடன் உந்தவினை இன்றே போகிதே!
பதறி நிற்கும் பக்தர்களுக்கு அபயமளித்து
பாங்குடனே பவனிவந்தா நீயேப்பா!
தேரேரி வருகின்ற அற்புத காட்சி
தேசமெல்லாம் ஒளிக்கிறது அற்புத காட்சி!

தேரேரி வரும் முருகனின் அழகு கோலம்
தெருவெல்லாம் அவன் புகழ் மணக்கோலம்
இடம் தேடி இடம் பிடிக்கும் இன்னோர் கூட்டம்
இன்னல் போக்கிடும் அற்புத கோலம்
வடம் பிடித்து தேர் இழுக்கும் ஊர்கோலம்
வந்த துயர் பறந்திட மனக்கோலம்
கடல் போல் காட்சி தந்தார் நல்லூர்
முருகனை பணிந்து அவன் அருள் பெறுவோம்!

07.09.2010 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பிள்ளையாரை நாம் மனமுருகி நின்றால் ஐயா!
வந்த துயர் இன்றே வான் போல் மறைந்திடுமாம்
உம்மையே தஞ்சமென்றால் தந்திடுவீர்!

அன்பில் கரையும் மாந்தர் உம் அருளில்
திளைத்திடுவார் எம் பிணி தீருமையா வழி
பிள்ளையாரே வணங்கிடுவோம். பண்ணாகம் பதி
சொல்லும் மாத்தளையில் கொண்டவரே!

வாழ்வுக்கு வழிவகுத்து மகிழ்ச்சிக்கு அருளும்
தந்து வந்த வினை அகற்றும் வழிப்பிள்ளையாரை
வணங்கி நிற்போம்.

அல்லலை தீர்த்தொழித்து இன்னலை போக்கழித்து
தொல்லையை தொலைத்தொழித்து நல்லவை
தந்தருளும் வல்லமை கொண்டவராம் எம்
வழிப்பிள்ளையாரை நித்தமும் வணங்கி
மகிழ்வோம்.

நெஞ்சுருகி வணங்கும் பக்தர்
நேசமாகி உருகுகிறார் நித்தம் வஞ்சனை இல்லா
மாந்தர் நின் வழியில் வணங்கி நிற்பார்
தஞ்சமடையும் தீருக்கூட்டம்

அன்பினால் நிறைந்திடும் பக்தர் பெரும் கூட்டம்
மாத்தளையில் மகிழ்வோடு இத்தரை சிறப்பேக
குடமுழுக்கு இனிது காணும் வழிப்பிள்ளையாரே
எமக்கு சகவாழ்வு தந்துதவ திருவருள்
தாருமையா!

அலைமுகிலன் (புனைபெயரில்)

மாத்தளை மந்தண்டதவளை அரள்மிகு ஸ்ரீ வழிப்பிள்ளளையார்
ஆலய 2011.11.03 நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு
கூடர்வளி

## உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன்
## தீமிதிப்பு விழா பாமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திக் கடலெங்கும் உடப்பங்கரை தனிலே
காத்தெம்மை அருள் தாராள் திரௌபதையவள்
பக்தி வெள்ளம் பாங்குடனே ஒலி எழுப்ப...!
பார்த்த சாரதியுடன் சமேதமாய கோவில்
கொண்டான்...!
திக்கெட்டும் புகழோங்கும் உடப்புதனில்...!
தீமிதிப்பின் பெருமைதனை நானியம் போன்ற
தினைத்தவர்கள் அன்னையை நாடி வர
அன்பவர்கள் கொண்டாடும் ஆடித்
திருவிழாவை கண்டுகளிப்புறவே வாரீர்...!

பாரதக் கதையை பாங்குடனே உரைத்து
பக்தர்கள் பாங்கோடு பரவசமடைந்து அக்
கதையோட்ட நகர்த்துதலை அடியேற்றி
உற்சவங்கள் நடப்பது அற்புதகாட்சி
சடங்குகள் சம்பிரதாயங்கள் மரபும் - இங்கே
முன்னோர்கள் கட்டி காத்தனை பேணி
சபதம் நிறைவேற்றி விழாவெடுக்கும்
உற்சவத்தை கண்டுகளிக்க வாரீர்!

கரகம் பாலிக்கும் காட்சியை
காத்திடுவாய் என வரம் கேட்டை!
பார்த்திடுவோர் பக்தி வெள்ளம் தினைத்திட
பரந்தாமன் சந்நிதியில் கூடிடுவார் பக்தர்கள்
மரடிசை பாடிலும் மனதை கொள்ளையிட
சுழன்றாடி கரகம் அடி சுற்றிட
பாவையர்கள் ஒலிமிட்டு குரவையிட
அற்புதங்கள் நிறைந்த அழகு மஞ்சத்தில்
அன்னையின் அழகுகாட்சி காண வாரீர்

வந்தாரை வரவேற்கும் சீருடப்பு
வளமான செல்வங்கள் செழுத்தோங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றெடி கோபுரம் உயர்ந்தொழிக்க
அற்புத காட்சியங்கே ஓங்கி ஒலித்திட
பத்தினியாம் பார்போற்றும் உத்தமியாம்
அன்னை திரௌபதி மலரடி பூண்டு
அருள் தருவாய் அருதினமும் வரம் கேட்டிட
வந்திடுவீர் அவன்பாதம் காண வாரீர்...!

பாண்டவர்கள் பூண்டவனவாசம் காட்சி பாரீர்!
பார்த்த சாரதி சமேத ருக்மணி சத்திய பாமாவை
பார்க்க வாரீர்
தவநிலை காட்சியில் அருச்சுனனின் அற்புதம்
காணீர்
அவன் அருள் பெற வரன் பெற்றிட வாரீர்
பாரதக் கதைகூறும் அம்மானை பாடலை கேளீர்
மரபுவழி உற்சவத்தின் மகிழ்வை பாரீர்
வந்திடுவீர் பார்த்து மகிழ்ந்திடுவீர் வாரீர் வாரீர்...!!!

**கே.மகாதேவன்**
**வீ.அலைமுகிலன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுமையில் ஒற்றுமை காண்பான்

மக்களை ஏமாற்றும் அரசியலுக்கா
 மாயமாய் உழைக்கின்றான்
ஏக்கம் நிறைந்த ஆசையில்
 படாதுபடுகின்றான்

கொண்ட கொள்கை இல்லாது
 பச்சோந்தியாக வாழ்கின்றான்
உண்ட வீட்டுக்கு இரண்டகச்
 செயலால் தெருவில் நிற்கின்றான்

தீய செயலில் கொடுமையால்
 கெட்டழிந்து நிற்கின்றான்
உயர்வைத் தேடி உத்தமனாக
 வாழப்பாடுபடுகின்றான்

போட்டி பொறாமை எண்ணத்தால்
 தன்னை அழிக்கின்றான்
தட்டிக் கேட்க ஆள் இல்லாததினால்
 தன்னால் மாய்கின்றான்

காதல் வயப்பட்டு நின்றதினால்
 தாயை வெறுக்கின்றான்
சாதனை என யெண்ணிமன
 வேதனை கொள்கின்றான்

மக்கள் சேவகனாக நடித்து
 பணமோசடி பண்ணுகின்றான்
தக்க சமயத்தில் செய்யும் தர்மத்தால்
 சான்றோர் ஆகிவிட்டான்

சாதி சண்டை ஒழிந்திங்கு
 சமாதானம் மலரவைப்பான்
நாதி இன்றி காணும் நம்மவரை
 நானிலம் போற்ற வைப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்பற்றுடன் நாம் வாழ
  நாளும் பாடுபடுவான்
காட்டுத் தீயைப் போல பரவும்
  வதந்தி ஒழித்திட முன் நிற்பான்

துன்ப துயரங்கள் கொண்ட வாழ்வை
  துரத்தி அடித்திடுவான்
பங்க மின்றிக் காணும் பாவையர்களை
  கண்டு கழியிறக்கமுறுவான்

உழைப்பே உயர்வென எண்ணி
  உறுதி கொண்டுழைப்பான்
பழைய பல்லவியைச் சொல்லும்
  கூட்டத்தாரை வேரறுத்திடுவான்

இன பேதமில்லா சமுதாயத்தை
  காணத் துடித்திடுவான்
கனம் பண்ணும் காளையரை
  கண்டு கண்ணியமாவான்

போதிமாதவன் தந்த போதனையை
  சாதனையாகப் போற்றுவான்
பாதியில் வந்த வேதனையால்
  ஒற்றுமை காணத்துடிப்பான்.

**தாயக ஒலி – 2019 ஜீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையோடு வாராயோ

எண்ணங்கள் எழில்பரவ
ஏந்திளையான் உலாவிவர
கண்ணாலே மொழிபேசி
காருண்யம் கரை தவழ
மின்னிலிடை மின்மினிக்க
வானோர் வாழ்ந்துரைக்க
சின்னவளே சிங்கார பெண்ணவளே
சிங்காரமாக சிறப்புடனே வாராயோ!

இன்னிசை ஓசையிலே
இசைவெள்ளம் கரை புரள
பன்னிசை பாடினாலே
பாலையவள் பலிந்துவர
மண்வாசல் மகிழ்ச்சியிலே
மக்கள் வெள்ளம் பாடிவர
என்னவளே எழிலானவளே பெண்ணே
ஏற்றங்காண சிறப்புடனே வாராயோ!

எட்டுத்திக்கும் எழில் மேவ
எண்ணுள்ளம் ஏற்றம்பெற
சிட்டு பைங் கிளியாளின்
சீரிழமை சிறந்தோங்க
வட்டமதி மின்மினிக்க
வானோர் வாழ்த்துரைக்க
பட்ட துயரங்கள் இன்றோ பறந்தோட
பாவையாளே சிறப்புடன் வாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி தன்னில் மதிமயங்க
மனமெல்லாம் உவகைகொள்ள
இகழ்ச்சிகள் இன்றோழிய
இகமெல்லாம் இன்புறவ
புகழ்ச்சிகள் பார் உரைக்க
புவனமெங்கும் அகிலத்தார் புகழ் உரைக்க
ஆரணங்கே சின்னவளே
சீக்கிரமாய் வாராயோ..!

தங்கு தடைகள் அகற்றிடவே
தாழாமை தகந்திடவே
பங்கமெல்லாம் தொல்லைகள்
பறந்தோடி பார்சிறக்க
கங்குகரை புரண்டதுயர்
காலத்தால் அழிந்திடவே
கரம் தூங்கி காரியங்கள் சிறப்பிக்க
கர வருடமே கருணையோடு
வாராயோ!

**தினகரன் 12.6.2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் கவிதை

## பாராளுமன்றத்தில்............ஒலித்தவை!



முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் எ.எச்.எம்.அஸ்வர் ஹாஜியார் அவர்கள் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது:-

எதிரணியின் முயற்சி காணல் நீராகிவிட்டது. இதைத்தான் உடப்பூர் வீரசொக்கன் இவ்வாறு அழகான முறையில் கவிதையொன்றைத் தந்துள்ளார்.

'நினைவலையில்
நித்திலம்
ரீங்காரமீட்டி
நினை வழங்கிய
என் மலர்
கனவலையில்
கருகி
கவர்ச்சியற்ற
கானல் நீராகியது'

எமது ஜனாதிபதியின் திட்டங்கள் இன்று செயல் வடிவம் பெறுகின்றன. பாடசாலை அபிவிருத்தி அமைப்பதால் பாடசாலையில் பல நன்மைகள் விளையும் என கருதியதாலேயே இத்திட்டம் அவசரமாக அவசரகால சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

'திட்டங்கள் தீட்டி
திறம்பட செய்தால்
திறமைகள் பல
பெற்றிடுவோம் - அந்த
திறமையின் பல
பேருண்மையால் இந்நாட்டில்
திறனுடன் நாங்கள்
வாழ்ந்திடுவோம்'



இந்த கவிதை எமது நிலையை தெளிவாக சித்தரிக்கின்றது.
'கங்கை நீர் வற்றவில்லை கவிதை தொகுதியிலிருந்து'
(தினகரன் - 1990 மார்ச் 09)
பாராளுமன்ற உரையில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org